# 22 நகர சபைகளில் 12 நகர சபைகளை தி. மு. க. கைப்பற்றியது


Riegstered as a News pape In Ceylon விலைசதம் 15 ★

ஈழநாடு சந்தா
[illegible] பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்: 77
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
உள்ளூர்ப்பதிப்பு மாத்திர
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் சித்திரை 17 ஸபர் 11 செவ்வாய்க்கிழமை 29-4-69]


யாழ்ப்பாணத்தில்

# புற்றுநோய் சிகிச்சை நிலையம் அமைக்க நிதி இல்லையாம்

## 'சியவச சுவீப்' முழுப் பணத்தையும் உடன் தரவும் இல்லையேல் கஷ்டம் வரும்

### கல்வி அதிகாரி மிரட்டல்

யாழ்ப்பாணம், திங்கள் 'சியவச லொத்தர் இரண்டாவது இலக்க சீட்டுகள் கொடுக்கப்பட்ட கல்லூரி அதிபர்களும், பாடசாலைத் தலைமை ஆசிரியர்களும் டிக்கட்டுகளுக்குரிய முழுப் பணத்தையும் உடனடியாகத் தம்மிடம் ஒப்படைத்துவிடவேண்டும்' என்று யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஒரு வட்டார கல்வி அதிகாரி ஒருவர் தமது வட்டாரத்திலுள்ள கல்லூரி அதிபர்களுக்கும் பாடசாலை தலைமை • ஆசிரியர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் கேட்டுள்ளார்.

''உடன் பணத்தை ஒப்படைக்கத் தவறினல் மிகவும் பாரதூரமான கஷ்டங்

இறுதியில் குறிப்பிட்டுள்ளார். அவரின் சுற்றுநிருபத்தின் விபரம் வருமாறு:

தங்களுக்குக் கொடுத்த சீட்டுக்களின் முழுப் பணத்தையும் உடன் ஒப்படைப்பதுமிகவும்முக்கியமும் அவசியமும் என்பதை அறியத் தருகிறேன்.

நான் கணக்கிட்டு வித்தியாதிபதிக்கு ஒப்படைத்து அவர் கணக்கிட்டு மந்திரி காரியாலயத்தில் ஒப்படைத்து அதன் பின்னர் 5-ந் திகதி சீட்டிழுப்பார்கள் இடையில் லீவு நாளும் உண்டு இவற்றை அறிந்து உடன் பணத்தை ஒப்படைக்கவும். தவறினல் மிகவும் பாரதூரமான கஷ்

## ஆஸ்பத்திரி கமிட்டி கோரிக்கைக்கு சுகாதார அமைச்சு கைவிரிப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

**யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் சிகிச்சை நிலையம் ஒன்றை அமைத்து தருமாறு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக் கமிட்டி விடுத்தவேண்டுகோளுக்கு சுகாதர அமைச்சு மறுப்புத் தெரிவித்துள்ளது.**

இலங்கை புற்றுநோய் நிவாரண சங்கத்தின்யாழ்ப்பாணக் கிளைத் தலைவர் டாக்டர் கே. கனகரத்தினம் கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்தே யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிச்சபை இந்த வேண்டுகோளை சுகாதார அமைச்சருக்கு விடுத்திருந்தது.

சுகாதார அமைச்சு இதற்குப் பதிலாக அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் தற்போது பண வசதி இல்லாததால் உடனடியாக

வேற்றப்பட்டன-

ஆஸ்பத்திரியில் புதிதாக நிறுவப்பட்ட இரண்டு வார்ட்டுகளுக்கும் மற்றைய வார்ட்டுகளுக்கும் கடமையாற்றவென 25 தாதிகள் தேவையெனக் கேட்டும் நான்கு தாதிகள் மட்டுமே மேலதிகமாகக்கொடுக்கப்பட்டார்கள். யாழ்ப்பாணத்தில் தாதிகள் பயிற்சிப் பாடசாலை ஒன்றிருந்தும் யாழ்ப்பாண [illegible] ஆஸ்பத்திரிக்குப் போதிய தாதிகள் இல்லாமலிருக்கின்றது. அடுத்த

டைகின்றது. மற்றைய இரு 'எக்ஸ்-றே' இயந்திரங்களும் அடிக்கடி பழுதடைகின்றன. இங்கு மிகக் கூடுதலான நோயாளிகள் எக்ஸ்றே எடுக்க தினமும் வருவதால் புதிய எக்ஸ்-றே இயந்திரம் ஒன்று உடனடியாகப் பொருத்த வேண்டும். (கா. நி)

## உலகநாடுகளில்

# மதுரைக் குழப்பத்தில் 17 பேருக்கு காயம்

சென்னை, ஏப். 28 தமிழ்நாட்டில் 73 நகர சபைகளில் நடைபெற்ற தேர்தல்களில் இன்று காலை வரை வெளியான 22 நகர சபைகளின் முடிவுகளின்படி 12 நகர சபைகளை திராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்றியிருக்கின்றது

6 நகரசபைகளில் மட்டும் காங்கிரஸ் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைத்திருக்கின்றது. மற்ற ஆறு நகரசபைகளிலும் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மைபலம் கிடைக்கவில்லை. பொள்ளாச்சி, ஆரணி, நாகர்கோயில், பாளையங்கோட்டை, பண்டுருட்டி போன்ற நகரசபைகளைக் காங்கிரஸ் கட்சி கோட்டைவிட்டுள்ளது.

மதுரையில் நேற்று வாக்குகள் எண்ணப்பட்டபோது ஏற்பட்ட ஒருகலவரத்தை அடக்க பொலிசார் கண்ணீர்ப்புகையும் தடியடிப்பிரயோகமும் பாவிக்கவேண்டியேற்பட்டது.

## நாகர்கோவிலிலும் வெற்றி

காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கத்திலிருந்தநாகர்கோவில் நகரசபையை தி. மு க. கைப்பற்றியுள்ளது. மொத்தமுள்ள 29 இடங்களில் 20 இடங்கள் தி. மு. க. வுக்கு கிடைத்துள்ளன. காங்கிரஸ் 9 இடங்களைப் பெற்றுள்ளது.

32 இடங்களைக் கொண்ட காஞ்சிபுரம் நகரசபைத் தேர்தலில் 17 இடங்களை தி. மு. கவும், 9 இடங்களை காங்கிரசும், 3 இடங்களை மார்க்ஸிய கம்யூனிஸ்டும் பெற்றுள்ளதாக இதுவரை வெளியான முடிவுகள் தெரிவிக்கின்றன.

செங்கற்பட்டு, தஞ்சாவூர் கடலூர் முதலிய நகரசபைகளிலும் தி. மு. க. வே பேரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

18 இடங்களைக் கொண்ட தாம்பரம் நகரசபையில் காங்கிரஸ் 9 இடங்களைப் பெற்று பெரும்பான்மை ஆகியிருக்கிறது. இந்த நகரசபையில் தி. மு. க. வுக்கு 8 இடங்களும், சுதந்திராவுக்கு ஒரு இடமும் கிடைத்துள்ளன.

மே தினக் கொண்டாட்டம்

# 'முடிவை மாற்றிக் கொள்ளுங்கள்'

## 'சண்'ணிடம் பௌத்த தலைவர்கள் கோரிக்கை

கொழும்பு, திங்கள் மேதின விழா மே முதல் தேதி தனிப்பட்ட காணியில் கொண்டாடப்படும் என்று சீன சார்புக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. என். சண்முகதாசன் நேற்றுத் தெரிவித்தார்.

அரசியல் கூட்டங்களுக்கு மே முதல் தேதி பொலிஸார் தடைவிதித்திருப்பது இலங்கையில் நிறுவனங்களுக்கு உள்ள சுதந்திரத்தை தெளிவாக்குகிறதென்றும் அவர் தெரிவித்தார்.

வெசாக் தினமான மே முதல் தேதி மே தினத்தைக் கொண்டாட எடுத்த முடிவைக் கைவிடுமாறு பௌத்த தலைவர்கள் நேற்று இறுதி முறையாக, திரு. என். சண்முகதாசனிடம் கோரியுள்ளனர்.

கொம்பனித் தெருவில் உள்ள டிமெல் பார்க்கில், மேதினத்தை முதல் தேதி கொண்டாடுவதற்கு சீன சார்புக் கம்யூனிஸ்ட் கட்சித் தொழிற்சங்கங்கள் செய்த விண்ணப்பத்தை கொழும்பு மாநகரசபை நேற்று நிராகரித்துவிட்டது.

வண. மாதிபண்ணசிக மகாநாயக்க தேரோ மே தினத்தை முதல் தேதி கொண்டாடும் திட்டத்தைக் கைவிடுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

திரு. சண்முகதாசன் முதல் தேதி மே தினத்தைக் கொண்டாடும் திட்டத்தைக் கைவிடமறுத்தால் பௌத்த தொழிலாளர்களையும், பௌத்தர்களல்லாத தொழிலாளர்களையும் மே முதல் தேதி சீன சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியின் மே தினத்தில் கலந்துகொள்ளாது பகிஷ்கரிக்கும்படி வேண்டுகோள் விடுக்கப் போவதாகவும் மகாநாயக்க தேரோ கூறினர்.

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைவர் திரு. ஏச். டபிள்யூ. அமரசூரியா, இந்நாட்டிலுள்ள பௌத்தர்கள் எல்லோரும், சீன சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியின் மேதின விழாவை எதிர்க்கவேண்டும் என்று கூறினர்.

வெசாக் போயா தினமான மே முதல் தேதி சமய நிகழ்ச்சிகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஒவ்வொரு பௌத்தர்களும், சீன கம்யூனிஸ்ட் கட்சியினரின் திட்டத்தை எதிர்க்கவேண்டும் என்றும், ஒருசிலரின் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தினல் புனிதமான வெசாக் தினம் பாதிக்கப்படக்கூடாது என்றும், அகில இலங்கை பௌத்த பெண்கள் சங்கத் தலைவி திருமதி நோபல் கிரியல்க கூறினர்.

# மே 2-ம் திகதியும் கூட்டம் ஊர்வலங்களுக்குத் தடை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டாரத்திலுள்ள கல்லூரி அதிபர்களுக்கும் பாடசாலை தலைமை ஆசிரியர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் கேட்டுள்ளார்.

''உடன் பணத்தை ஒப்படைக்கத் தவறினால் மிகவும் பாரதூரமான கஷ்டங்கள் எங்கள் யாவருக்கும் ஏற்படலாம்'' என்று கல்வி அதிகாரி தமது கடிதத்தில் காரியாலயத்தில் ஒப்படைத்து அதன் பின்னர் 5-ந் திகதி சீட்டிழுப்பார்கள் இடையில் லீவு நாளும் உண்டு இவற்றை அறிந்து உடன் பணத்தை ஒப்படைக்கவும். தவறினால் மிகவும் பாரதூரமான கஷ்டங்கள் எங்கள் யாவருக்கும் ஏற்படலாம்.

இந்த வேண்டுகோளை சுகாதார அமைச்சருக்கு விடுத்திருந்தது.

சுகாதார அமைச்சு இதற்குப் பதிலாக அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் தற்போது பண வசதி இல்லாததால் உடனடியாக யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் சிகிச்சை நிலையம் அமைததுத்தர முடியாதிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிகின்றது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிசபை உபதலைவர் திருமதி அந்தோனியா சுவாமிநாதர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பின் வரும் தீர்மானங்களும் நிறை டும் நான்கு தாதிகள் ... டுமே மேலதிகமாகக்கொடுக்கப்பட்டார்கள். யாழ்ப்பாணத்தில் தாதிகள் பயிற்சிப் பாடசாலை ஒன்றிருந்தும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குப் போதிய தாதிகள் இல்லாமலிருக்கின்றது. அடுத்த தடவை இங்கிருந்து தாதிகள் பயிற்சி முடிந்து வெளியேறும்போது போதிய தாதிகளை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கடமையாற்ற நியமிக்க வேண்டும்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலுள்ள ஒரு 'எக்ஸ்-றே' இயந்திரம் 20 வருடத் தொன்மை வாய்ந்ததால் எப்போதுமே அது பழுத ... யாகப் பொருத்த வேண்டும். (கா. நி)

# நாவலர் சந்திப் படுகொலை அப்பீலில் எதிரி விடுதலை

கோட்டை, ஞாயிறு

நாவலர் சந்திப் படுகொலை சம்பந்தமாக வடபகுதி சுப்ரீம் கோர்டினால் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த எதிரியான சீனி இரத்தினம் அப்பீல் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார்.

1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ந் திகதி நாவலர் சந்திக்கருகே தெய்வேந்திரம் என்னும் இளைஞரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதாக சீனி இரத்தினத்தின் மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் வடபகுதி அசைஸ் நீதிமன்றம் எதிரிக்கு மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. இதை ஆட்சேபித்து எதிரி அப்பீல் செய்திருந்தார் அப்பீல் நீதிமன்றம் இவ் வழக்கை மீண்டும் புதிதாக விசாரணை செய்யும்படி தெரிவித்தது. மீண்டும் இவ்வழக்கை விசாரணை செய்த வடபகுதி அசைஸ் நீதிமன்றம் மீண்டும் எதிரிக்கு மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. இதையும் ஆட்சேபித்து எதிரி அப்பீல் செய்திருந்தார்.

நீதியரசர்கள் ஏ. எல். எஸ். சிறிமானே, ஏ. ஸி. எஸ். அலெஸ், வீரமந்திரி ஆகியோர் முன்னிலையில் அப்பீல் விசாரணை செய்யப்பட்டது விசாரணை முடிவில் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தனர்.

எதிரிக்காக வழக்கறிஞர் ஈ. ஆர். எஸ். ஆர் குமாரசாமியின் உதவியுட வழக்கறிஞர் ஜி. ஸி. சிட்டி ஆஜராகி வாதாடினார்.

# டிகால் ராஜினாமா அமெரிக்காவில் அதிர்ச்சி

லண்டன் ஏப் 28.

அதிபர் டிகால் பிரஞ்சு அதிபர் பதவியைத் துறப்பதற்கு எடுத்த முடிவு பற்றி உலகெங்கும் அபிப்பிராயங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் அதிபர் டிகாலின் ராஜினாமா அரசியல் அதிகாரப் பூர்வமான வட்டாரங்களில் ஆச்சரியத்தையேற்படுத்தியிருக்கின்றது.

பிரான்சில் எதிர்பாராத விளைவுகளை இந்தராஜினாமா தோற்றுவிக்கக்கூடும் என்று இத்தாலியில் கருத்துவெளியிடப்பட்டுள்ளது,

பொன்னில் மேற்கு ஜெர்மன் அரசு வெளியிட்ட வொரு செய்தியில் டிகாலின் பதவி துறப்பின் காரணமாக பிரான்சின் வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றம் ஏற்படுமா வென்பது இனிமேல்தான் தெரிய வேண்டுமென்று கூறியுள்ளது

பாரிசில் டிகாலுக்கு ஏற்பட்ட தோல்வியை வாலிபர்களும் குறிப்பாக மாணவர்களும் எதிர்கட்சியினரும் வரவேற்றுள்ளனர்.

'போய்வாரும் டிகால் என்றுகோஷித்துக் கொண்டு மாணவர்கள் தெருக்களில் சுற்றினார்கள். சில இடங்களில் கோஷ்டி மோதல் ஏற்பட்டது.

# உலகநாடுகளில் விநாயகவணக்கம்

இமையாணன், திங்கள்

''உலகில் சமயங்கள் மறுமலர்ச்சி அடைந்த காலத்தில் இந்துசமயம் இருளடைந்தமையால் இந்து சமயம் சம்பந்தமான விக்கிரகங்கள், குறிப்பாக விநாயக விக்கிரகங்கள் மறைக்கப்பட்டன அதுபோல் இலங்கையிலும் அந்நியரால் அழிக்கப்பட்டன.''

இவ்வாறு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் ஆனந்தகுக் கூறினார். இந்தோனேஷியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட கபாலிவிநாயகர் சிலை இங்கு தரிசனத்திற்கு வைக்கப்பட்டு பூஜை செய்யப்பட்டது.

''பதினையாயிரம் வருடங்களுக்கு முன்பே விநாயக வணக்கம் பெரு போன்ற நாடுகளில் இருந்து வந்தது ஜாவா போன்ற நாடுகளில் பக்திசிரத்தையுடன் விநாயகரை வணங்கிவந்தனர். விநாயக வணக்கம் இந்துக்களின் ஒரு முக்கிய வணக்கமாகும்'' என்றார் அவர்.

இவ் விநாயகர் சிலை மற்றும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி உட்பட மற்றும் பல பாடசாலைகளிலும் காட்சிக்கு வைக்கப்பட்டது.

# மே 2-ம் திகதியும் கூட்டம் ஊர்வலங்களுக்குத் தடை

யாழ்ப்பாணம். திங்.

மே மாதம் முதல் திகதி மட்டுமல்லாது மே மாதம் இரண்டாம் திகதியும் நாட்டில் எந்தப் பகுதியிலும் அரசியல் ஊர்வலங்களோ, பொதுக் கூட்டங்களோ நடத்துவதற்கு அனுமதியளிபபதில்லை என்று பொலிஸ் அதிபர் அறிவித்துள்ளார். விசாக தினமான மே மாதம் முதல் திகதியன்றும் அதற்கு அடுத்த நாளும் சமய சம்பந்தமான ஊர்வலங்கள், கூட்டங்கள் நடைபெறுவதற்கும் ஒலிபெருக்கி உபயோகிப்பதற்குமே அனுமதி வழங்கப்படும்.

மே மாதம் முதலாம் இரண்டாம் திகதிகளில் வடபகுதியில் சில அரசியல் ஸ்தாபனங்கள் மேதின ஊர்வலமும் மேதினக் கூட்டமும் நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் உத்தரவை மீறி இந்த இரு தினங்களிலும் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடத்த முற்படுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் வடபகுதி பொலிஸ்அதிபர் தெரிவித்துள்ளார்.

## எதிர்க்கட்சி தலைவர் மரணம்

சென்னை, எப். 27

தமிழகத்தின் மேற்சபை எதிர்க்கட்சி தலைவரான திரு. என். ஆர் தியாகராஜன் இன்று மதுரையில் காலமானார். 54 வயதான இவர் காமாலை நோய் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

## கர்ப்பிணிகள் மரணம்; ஒருவிளக்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

அறுவைச் சிகிச்சையின் போது இருகர்ப்பிணிகள் யாழ் ஆஸ்பத்திரியில் மரணமானது கவெளிவந்த செய்திபற்றி அதிகாரி ஒருவர் கூறுகையில் அறுவைச் சிகிச்சையின்போது ஒருவரே மரணமானார் என்றும், மற்றவர் அறுவைசிகிச்சை அறையினுள் கொண்டு செல்லும் போதே காலமாகிவிட்டதாகவும் தெரிவித்தார்.

## 69 ருத்தல் அபின் அகப்பட்டது

யாழ்ப்பாணம், திங்கள்

வல்வெட்டித்துறையில் ஒரு வீட்டில் திடீரெனப் புகுந்து சோதனை நடத்திய பொலிஸ் கோஷ்டியினர் அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த 69 ருத்தல் அபினைக் கண்டெடுத்தனராம். சுமார் 35,000 ரூபாய் பெறுமதியானதென மதிப்பிடப்படும் இந்த அபினை எடுத்த பொலிசார் அந்தவீட்டில் அச்சமயம் இருந்த ஒரு பெண்ணையும் கைது செய்தனர். அபின் பற்றிய தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து பொலிசார் இரண்டு நாட்களாகத் தீவிர கண்காணிப்புச் செலுத்தி வந்ததாகவும் இரண்டு மோட்டார் கார்களைத் தீவிர கண்காணிப்புச் செலுத்திவந்ததாகவும் இரண்டு மோட்டார் கார்களைசோதனையிட்டபின் குறிப்பிட்ட வீட்டை உதவிப் பொலிஸ்இன்ஸ்பெக்டர் வரகொடை தலைமையில் பொலிஸ் கோஷ்டி சோதனையிட்டதாகவும் அப்போது தான் 69 ருத்தல அபின் கிடைத்தாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஒரு பகுதி அபின் கொழும்புக்குக் கடத்தப்பட்டிருக்கலாமென பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

## புற்றுநோயாளருக்கு உதவிப் பணம்

யாழ்ப்பாணம், செவ்.

புற்றுநோயாளரில் உதவிப்பணம் வேண்டுபவர்கள், மகாரகமை ஆஸ்பத்திரியில் அளிக்கப்பட்ட நீல அட்டையுடன், புற்றுநோய் கஷ்ட நிவாரண சங்கத் தலைவரான டாக்டர் கே. கனகரதனம், 1, மணத்தரை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் விலாசத்துக்கு உடன் எழுதுமாறு அவர் கேட்டுக்கொள்கிறார்

# போட்டியில் கைகலப்பு; ஐவர் காயம்; 13 பேர்கைது

யாழ்ப்பாணம், திங்கள்

சனசமூக நிலையங்களுக்கிடையேவிளையாட்டுஅமைச்சின் ஆதரவின்கீழ் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்று நேற்று பலத்த கைகலப்புடன் நிறுத்தப்பட்டது. மத்தியஸ்தர் பிழையான தீர்ப்பை வழங்கினார் என்று கோஷமிட்டபடி விளையாட்டுத்திடலில்இறங்கியஇருதரப்பு ஆதரவாளர்களும் இறுதியில் தங்களுக்குள் மோதிக்கொண்டனர். இதில் 5 பேர் படுகாயமுற்றனர். 13 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

சென்மேரிஸ் சனசமூக நிலையத்திற்கும். றெக்ளமேசன் சனசமூக நிலையத்திற்குமிடையில் இந்தப் போட்டி நேற்று யாழ்ப்பாணம் பொலிஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. கலகத்தை அடக்குவதற்கு பொலிஸ் மணி அடிக்கப்பட்டு பொலிசார் அழைக்கப்பட்டனர். சுமார் 10 நிமிடம்வரை நீடித்த இந்தக் கைகலப்பை, பொலிசார் நிறுத்துவதில் மிகவும் சிரமப்பட்டனர்.

இடைவேளைக்குப் பின்னர் நடந்த இந்தக் கைகலப்பு சம்பந்தமாக கைது செய்யப்பட்ட அனைவரும் இன்று மாஜிஸ்டிரேட் முன் ஆஜர் செய்யப்படுவர். காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிககப்பட்டனர். போட்டிக்கு மத்தியஸ்தராக திரு. தேவபாலன் கடமையாற்றினார். (தே. நி.)

## பக்தவத்சலம் உடல்நிலை திருப்தி

பரிதாபாத், ஏப். 27

பரிதாபாத் காங்கிரஸ் மாநாட்டுப் பந்தல் தீப்பற்றியபோது கைமுறிவு ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் சிசிச்சை பெற்றுவரும் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலத்தின் உடல்நிலை திருப்திகரமாக இருப்பதாக அவருக்கு சிகிச்சை யளித்துவரும் டாக்டர் அறிவித்துள்ளார்.

# 1964ல்வேலை இழந்தோருக்குஉதவி மசோதா சமர்ப்பிக்கப்பட்டது

கோட்டை, ஞாயிறு

**உள்ளூர் ஆட்சி சேவையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு பென்ஷன் வழங்குவதற்கான மசோதா ஒன்று நேற்று ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. 1964-ம் ஆண்டு ஜூன் மாதத்திற்கு முன் சிங்கள நிபந்தனையால் வேலையிழந்த ஊழியர்களுக்கும் பென்ஷன் வழங்கும் திட்டம் இம்மசோதாவில் இடம்பெற்றுள்ளது.**

உள்ளூராட்சி சேவையில் தற்போதிருப்பதை விட பாரதூரமானமாற்றங்களைக் கொண்டுவர வளிவகுக்கும் இம்மசோதாவை உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிமேதாசா நேற்று ஆட்சி மன்றத்தில் சமர்ப்பித்தார். இளைப்பாற்றுச் சம்பளம், இடமாற்றத்திட்டம், கைம்பெண், அனாதைச் சிறுவர் உபகார நிதி முதலியன உள்ளூராட்சி சேவையாளருக்கு வழங்குவதற்கு இம்மசோதாவழிவகுக்கும். 1964-ம் ஆண்டு சிங்கள நிபந்தனையால் வேலை இழந்தவர்களுக்கும் பென்ஷன் கிடைக்க வாய்ப்பு உண்டு.

ஏனைய அரசாங்க திணைக்களங்களில் கடமையாற்றும் ஊழியர்களையும்இச்சபைக்கு இடமாற்றம் செய்யவும்வழிவகைகள் மேற் கொள்ளப்படும். தற்போது உள்ளூராட்சி சேவையில் அமர்த்தப்பட்ட ஊழியர்கள் வேறு திணைககளங்களுக்கு இடமாற்றம் செய்வதில்லை.

அதிகாரசபையில் உள்ள 9 அங்கத்தவர்களின் எண்ணிக்கையும் 5 ஆகக் குறைக்கப்பட விருக்கிறது. அத்துடன் ஒரு முழுநேரத் தலைவரும் இந்த அதிகார சபைக்குநியமிக்கப்படுவார்.

# மோட்டார் வண்டிச்சில்லு கழன்று மோதியது வாலிபர் மரணம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

வீதியில் சைககிளில சென்றுகொண்டிருந்த வாலிபன் ஒருவனை, ஓடிக்கொண்டிருந்த மோட்டார் வண்டியிலிருந்து கழன்று வந்த சில்லு மோதியதாம்.

இதனால் நிலத்தில் விழுந்து மண்டையில் படுகாயமுற்ற 19 வயது வாலிபரான ஜெகநாதன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒன்றரை மணிநேரத்துள் மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை ஆனைக்கோட்டைப் பகுதியிலுள்ள ஆறுகால் மடத்துக்கருகாமையில் நடைபெற்றது. மரணமான வாலிபர் யாழ்ப்பாண நகரிலுள்ள கராஜ் ஒன்றில் வேலைசெய்வதாகவும், வேலைமுடிந்து சைக்கிளில் செல்கையில் வீதியில் சென்ற கார் ஒன்றின் சில்லு கழன்றுவநது சைக்கிளில் மோதியதால் வாலிபர் நிலத்தில் வீழ்ந்து, மண்டையில் படுகாயமடைந்ததாகவும், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு ஒன்றரை மணி நேரத்துள் மரணமானதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட வாகன சாரதியான குமாரவேலு என்பவர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டார். யாழ்ப்பாணம் போக்குவரத்துப் பகுதி பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்திருந்தனர்.

மரணவிசாரணை நடாத்திய திரு. எஸ். கனகரத்தினம் பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

(கா. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

பூசகர்:
அரியாலை கொட்டுர்கிணற்றுப் பிள்ளையார் கோவிலுக்கு, கோவிலில் இருந்து நிரந்தரபூசை வைக்கத்தகுந்தவர். தகைமையைக் குறித்து விண்ணப்பிக்கவும். அல்லது 1-5-69, 2-5-69-ந் திகதிகளில் நேரில் வந்து சந்திக்கவும், வே. சோமசுந்தரம், 226. கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 982

பேக்கர்:
பாண், கேக் வகைகள் மற்றும் சுவீற்ஸ் தினிசுகள் தயாரிக்கக் கூடிய நல்ல அனுபவம் உள்ளவர் நேரிலோ அல்லது கடிதமூலமோ அத்தாட்சிப்பத்திரங்களுடன் உடனே விண்ணப்பிக்கவும். கே. செல்வநாயகம் 2A கச்சேரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். 983

நெசவு செய்வதில் அனுபவமுள்ள பெண்கள்தேவை. நேரில் தொடர்புகொள்ளவும். கருணை நெசவு நிலையம், ''கண்ணகிரி'', இடந்தரை ஒழுங்கை, காங்கேசன்துறை. 974

## விற்பனைக்கு

காணி:
உச்சுவெலி தெற்கு ''பங்கிராணை'' என்னும் 95பரப்புக் காணியில் எட்டில் ஒரு பங்கு: எல்லைகிழக்குந் தெற்கும்இராமலிங்கம்பெண் தங்கரத்தினத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு ஊரெல்லைத் தெரு மேற்கு யோன் இராசாவின் ஆதனம். விபரங்களுக்கு எஸ். தம்பு கொடிகாமம். 985

காணி:
கொக்குவில் ஸ்டேசன் ரோட்டில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ச. சின்னத்துரை, றயில் ரோட், கொக்குவில். 975

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## காங்கேசன்துறை பட்டின சங்கம்
## வேலை விளம்பரம்

காங்கேசன்துறைப் பட்டின சபைத் தலைவரால் 4-ம் வட்டாரத்திலுள்ள கலைவாணிவீதிக்குக்கல்லுப்பதித்துத் தார் ஊற்றுதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்பத்திரங்கள் மேற்படி பட்டின சங்கக் காரியாலயத்தில் 17-5-69-ம் திகதி காலை 12-00 மணி வரைக்கும் நன்னம்பிக்கைப் பணமாக ரூபா 25/-ம், பத்திரத்துக்கு ரூபா 2/-ம் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பக்காரர்கள் அரசாங்கத்தில் அல்லது தலதாபனத்தில் ரூபா 10,000/-க்கு குறையாத தொகைக்குப் பதிவு செய்யப்பட்டவர்களாக இருத்தல்வேண்டும்.

விண்ணப்பப்பத்திரங்கள் இணைப்பிரதியுடையதாக இரு பிரதிகளும் 1969ம் ஆண்டு மே(வைகாசி) மாதம் 19-ம் திகதி நடுப்பகல் 12-00 மணிக்குப் பிந்தாமல், பட்டின சங்கக் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்பெட்டியிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

இதைப்பற்றிய விபரங்கள் யாவும் பட்டின சங்கக் காரியாலயத்தில் கந்தோர் நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஆ. வ. சதாசிவம்,
தலைவர்,
காங்கேசன்துறை,
பட்டின சங்கம்.

பட்டின சங்க
அலுவலகம்,
காங்கேசன்துறை.
25-4-69 1549

மானிப்பாய
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
சனிபோயா, போயா 2-30 மணி
ஆஸாத் - சித்ரா
நடித்த
ஜிம்போ
(கலர் - தமிழ்)

ராணி
[யாழ்ப்பாணம்]
[தினசரி 3 காட்சிகள்]
ஜெய்சங்கர்
விஜயகுமாரி
நடித்த
ஜீவனாம்சம்

# பரு. காரியாதிகாரி பிரிவு விளையாட்டுப்போட்டி முடிவுகள்

வல்வெட்டித்துறை, திங்.
பருத்தித்துறை காரியாதிகாரியின் கீழ் இயங்கிவந்த 1969-ம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டி வல்வை நிற்கொமு மைதானத்தில் நடைபெற்றது. வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு:-

100 யார் ஓட்டம்: ரி. நாகேஸ்வரன் வி. சிவஞானம், எஸ். வேலாயுதம்.

200 யார் ஓட்டம்: ரி. நாகேஸ்வரன், வி. சிவஞானம், ஏ. நவரத்தினம்.

400 யார் ஓட்டம்: எஸ். தங்கவடிவேல், என். தனபாலசிங்கம், ரி. நாகேஸ்வரன்.

800 யார் ஓட்டம்: என். தனபாலசிங்கம், ஏ. புவனேந்திரர், வி. சிவானந்தர்.

1500 யார் ஓட்டம்: வி. தனபாலசிங்கம், வி. சிவானந்தர், ஏ. புவனேந்திரம்.

4X400யார்: பொலிகண்டி பாரதி கழகம், பருத்தித்துறை கோல்டன் பிளாஸ், பருத்தித்துறை யுனைடெட்.

4X400 யார்: வல்வை யுனைடெட், பருத்தித்துறை ஜேம்ஸ்சன், பருத்தித்துறை கோல்டன் பிளாஸ்.

நீளம் பாய்தல்: கே. தேவசிகாமணி, வி. சிவஞானம், எஸ். வேலாயுதம்.

மூன்றுகால் ஓட்டம்: எஸ் தங்கவடிவேல், வி சிவானந்தர், கே. குலசேகரம்.

உயரம் பாய்தல்: எஸ். தங்கவடிவேல், என். தங்கராசா.

குண்டு எறிதல்: கே தேவசிகாமணி, ஆர். யோகேஸ்வரன், எஸ். ஜெயபாலசிங்கம்.

சாம்பியன்: வி.எஸ். தங்கவடிவேல்.

சாம்பியன் கிண்ணம்: வல்வையுனைடெட்.

இப்போட்டிக்கு விளையாட்டு அதிகாரி திரு. எஸ் கதிர்காமத்தம்பி பொறுப்பாளராக கடமையாற்றினர்.

## இன்றைய பலன்

29-4-69
சௌமிய வருடம்
சித்திரை மீ 17-ம் வ
செவ்வாய்க்கிழமை

திதி- துவாதசி பகல் 2-02 மேல் திரயோதசி.

நட்சத்திரம்- உத்தரம் பகல் 3-10 மேல் அத்தம்.

ராகுகாலம்- 2-57 4 27.

சுபநேரம் 10-27—11-57.

இன்று பிறந்தவர்களுக்கு மனநிம்மதி குனறும். ஆத்திர உணர்ச்சி ஆபத்தை விளைவிக்கும். எதிலும் அடக்கமாக நடந்து கொள்ளவும். பொருள்வரவுக்கு இடமேற்படினும் செலவு வகைகளும் அதிகமாகவே இருக்கும். வழக்கு விவகாரங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். நண்பர்கள் விடயத்தில் மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொள்ளவும்.

மேஷம்- கடமையில் தொல்லை, சோர்வுமிகுதி.
ரிஷிபம்- பரோபகாரச் சிந்தை, உறவினர்வருகை.
மிதுனம்- வியாபார

## இணுவில் சாம்பியன்

உரும்பராய், திங்கள்
வலிகாமம் வடக்கு காரியாதிகாரி பிரிவினரால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில் இணுவில் இந்துவிளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று சாம்பியன் வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.

## கரபந்தாட்ட சுற்றுப்போட்டி

உரும்பராய், திங்கள்
இணுவில் இந்து விளையாட்டுக்கழக 3-வது ஆண்டு விழாவை முன்னிட்டு கரபந்தாட்ட சுற்றுப்போட்டியொன்று மேற்படி கழகத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்டு நடைபெறவிருக்கிறது. யாழ். மாவட்டத்திலுள்ள கோஷ்டிகள் பங்குபற்றும் இச் சுற்றுப்போட்டி அடுத்த மாதம் இணுவில் மத்தியசந்தை மைதானத்தில் இடம்பெறும்.

## திருவடி நிலையில் [illegible] ச்சல்குடாகம்

உரும்பராய் இந்துக் கல்லூரியினரின்

# திருக்கேதீஸ்வர பூங்காவனம்

உரும்பராய், திங்கள்
உரும்பராய் இந்துக் கல்லூரியினரால் வருடந்தோறும் நடாத்தப்பட்டு வரும் திருக்கேதீஸ்வர பூங்காவன திருவிழாவின் இவ்வருட உற்சவம் வரும் 2-ந் திகதி நடைபெறவிருக்கிறது.

உரும்பராய் இந்துக்கல்லூரியினரால் இவ் உற்சவத்துக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:

பக்திப்பாடல்கள்: கல்லூரி மாணவிகள்; பண்ணிசை: [illegible] சங்கீதபூஷணம் திருமதி [illegible], வயலின்: உ. ராதாகிருஷ்ணன், மிருதங்கம்: [illegible] நாதன்; இன்னிசை: சங்கீதபூஷணம் செல்வி மலர்தேவி இரத்தினசிங்கம், சங்கீதபூஷணம் செல்வி சிவசோதி சிவரத்தினம்; வில்லிசை: 'பிட்டுக்கு மண் சுமந்த கதை' உரும்பராய் வளர்மதி கலாமன்ற வில்லிசைக் குழுவினர்.

கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் பழைய மாணவர்களும் இவ்வுற்சவத்தில் பெரும்பான்மையாக கலந்துகொள்ள விசேட பஸ்கள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

## விளையாட்டுப் போட்டி முடிவுகள்

உடுவில், திங்கள்
சுன்னாகம் பொலிஸ் பகுதியினர் அண்மையில் நடத்திய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு:-

வண்டிச்சவாரி 'ஏ' பிரிவு கே. சின்னத்தம்பி, உடுவில், திரு. எம் கந்தையா, அளுக்கை, அளவெட்டி.

வண்டிச் சவாரி 'பி' பிரிவு ஆர். சிவப்பிரகாசம், பண்டத்தரிப்பு, வி. பிள்ளையார், உடுவில்

திருக்கல் வண்டிப் போட்டி- திரு. வி. கனகரத்தினம்.

கரபந்தாட்டம் - இளந்தென்றல் மன்றம். சுன்னாகம்; காந்திரூபன் விளையாட்டுக் கழகம், சுன்னாகம்.

தாச்சிப் போட்டி அண்ணா விளையாட்டுக் கழகம் இணுவில்; மல்வத்தை விளையாட்டுக் கழகம், உடுவில்.

கயிறு இழுத்தல் போட்டி இணுவில் இந்து விளையாட்டுக் கழகம், மல்வானை விளையாட்டுக் கழகம்.

மரதன் ஓட்டம் எம். முருகையா, ஐ. செல்வரத்தினம்.

பெண்கள் சைக்கிள் ஓட்டம் செல்வி பத்மாதேவி தம்பு, செல்வி. வில்லிமலர் வல்லிபுரம்.

சிறுவர் சைக்கிள் ஓட்டம் ஏ. ஜெயராசா, ஆர். இராயகாந்தன்.

விநோத உடைப்போட்டி கே. மாணிக்கம், எஸ். சிவானந்தன்.

தேங்காய் உடைத்தல்:- கே. கணேசு, அளவெட்டி; கே. தம்பு, கோண்டாவில; ஏ. வன்னியசிங்கம் - கந்தரோடை.

## மாட்டு வண்டிப் போட்டி முடிவுகள்

குரும்பசிட்டி, திங்கள்
மயிலிட்டிக் கிராம சபைக்கு அருகிலுள்ள திறந்த வெளியில் மயிலிட்டி வடக்கு வாலிப முன்னணியினர் கிராம சேவையாளர்திரு. என். பாலசுந்தரம் தலைமையில் 3-வது வருட மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியை நடாத்தினர். வலி-வடக்குக் காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக் போட்டிக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றி பெற்றோருக்குப் பரிசுகளை வழங்கினர். போட்டி முடிவுகள் பின்வருமாறு:-

ஏ-பிரிவு சபாபதி திருச்செல்வம் (மயிலிட்டி) சின்னத்தம்பி செல்லத்துரை (மயிலிட்டி) பொன்னைய இராசதுரை (சுன்னாகம்) சின்னத்தம்பி பெரியதம்பி (கொல்லங்கலட்டி).

பி-பிரிவு:- சபாபதி திருச்செல்வம் மயிலிட்டி, இராமலிங்கம் சிவப்பிரகாசம் (பண்டத்தரிப்பு). இளையதம்பி செல்லையா(பலாலி), இளையதம்பி சின்னத்துரை (பலாலி).

# 'தொழிலாளர்களே தலைமைதாங்க வேண்டும்'
## மன்னார் ஜ. தொ. காங்கிரஸ் கூட்டத்தில் பேச்சு

மன்னார், திங்கள்
''போலித்தலைவர்களையும், போலித்தொழிற்சங்கங்களையும் நம்பி ஏமாறுதுதொழிற்சங்கங்களுக்கு தொழிலாளிதான் தலைமைவகிக்க வேண்டுமென்ற லட்சியத்துடன் ஆரம்பிக்கப்பட்ட ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸில் எமது மாவட்டத்திலுள்ள அனைவருமே ஒருங்குசேர்ந்து எதிர்காலத்தின் தலைவிதியை நிர்ணயிக்க வேண்டிய நிலையிலுள்ளோம்'' என்று மன்னாரில் திறந்துவைக்கப்பட்ட ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் மாநில காங்கிரஸ் கூட்டத்தில் வரவேற்புரை நிகழ்த்திய மன்னார்மாவட்ட பிரதிநிதி திரு. எஸ். ஆர். எம். வி. வேலுசாமி குறிப்பிட்டார்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் மன்னார் மாநிலக் கந்தோர் சென்ற 23-ம் திகதி பெரியகடை வட்டாரத்தில் அமைந்துள்ள கட்டிடத்தில், கொழும்பு மத்தியக்கமிட்டி நிர்வாக செயலாளர் திரு. எம். ஜெயராம், சம்பிரதாயப்படி திறந்துவைத்தார். கூட்டத்திற்கு பல பகுதிகளிலிருந்து தொழிலாளர் வந்து கலந்துகொண்டனர்.

மன்னார் மாநில கமிட்டித் தேர்தலில் உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் ஜனாப் எம் பி. எம். முகம்மது காசிம் ஆலிம் புலவர், உபதலைவர்கள்: ஏ. நடராஜா ஜனாப் எஸ். பி. முகம்மது, ஏ. பி ரெங்கநாதன், தனாதிகாரி: எஸ். கனகரட்ணம், காரியதரிசி: திரு. கே. சத்தியமூர்த்தி, திரு. எம். சூசைநாயகம். செயல்கமிட்டி அங்கத்தவர்களாக 11 பேர் தெரிவு செய்யப்பட்டனர். மாதர் சங்க நிர்வாகிகள் வருமாறு: தலைவி: திருமதி திரேஸ்தங்கம்மாள், காரியதரிசி: எஸ் மரியமங்களம், உபகாரியதரிசி: ராசம்மாள் ராசையா. தனாதிகாரி: மாரியாயி சோமாலை. 5 பேர்கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

திரு. எம். ஜெயராமன் (நிர்வாக காரியதரிசி: ஜ. தொ. கா. மத்திய கமிட்டி) பேசுகையில், ''நாட்டின் நல்வாழ்வு தொழிலாளர்களின் கை யிருப்பதை முதலாளிமாகள் மறந்து அவர்களுக்கு நன்மை செய்பவர்கள் போல்நடித்து அவர்களின் வாழ்வையேபாழாக்கிவிட்டார்கள்.

நாடற்றவர்கள்என்ற நிலை மாறி இந்திய பிரஜையாகவோ இலங்கைப் பிரஜையாகவோ தங்களைப் பதிவு செய்துகொள்ளவேண்டும். அதற்கான சகல உதவிகளையும் எமது ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் எந்தநேரத்திலும்செய்யும்'' என்று கூறினார்.

## பெரியாஸ்பத்திரியில் கோயில் கும்பாபிஷேகம்.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் ஸ்ரீ ஞானவைரவ சுவாமி கோயில் மகாகும்பாபிஷேக விழா இன்று மாலை ஆரம்பமாகி 30-ந் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு கும்பாபிஷேகம் நடைபெறுவதாக ஆஸ்பத்திரி சைவமகாசபையினர் அறிவிக்கின்றனர்.

## 'கடத்தல்' பெண்கள் பற்றி மந்திரி தஹா

வத்தகம, திங்கள்
தேசப்பற்று அற்றவர்களாக சேலைகளை இந்நாட்டிற்கு கடத்திவரும் பெண்கள் இருக்கும்வரை இங்கு நெசவுத்தொழில் விருத்தியடையாது என உள்நாட்டு அமைச்சர் கலாநிதி டபிள்யூ தகநாயக்கா இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது கூறினார்,

கைத்தறிதுணி கண்காட்சியொன்றை குத்துவிளக்கேற்றி திறந்து வைத்துப் பேசுகையில் மந்திரி தகநாயக்கா வருடந்தோறும் 25,000 இலங்கைப் பெண்கள் புறக்கோட்டை வியாபாரிகளின் ஒத்துழைப்போடு இந்திய சேலைகளை இங்கு கொண்டுவந்து வியாபாரம் செய்வதாகக்கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவனம்சம

## வின்ஸர் யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

★ சிவாஜிகணேசன் ★ ஜெயலலிதா

ஏ. வி. எம். ராஜன், ஜோதிலக்ஷ்மி

சோ, நாகேஷ்

நடித்த

ராம்குமார் பிக்சர்ஸ்

**கலாட்டா கல்யாணம்**

இன்று முதல்

## யாழ் வெலிங்டன் திரையில்

தினசரி பி. ப. 2-30, மாலை 6-00 இரவு 9-30 மணிக்கு

போயா முன்தினம் போயா தினம்,

விடுமுறை நாட்களில் காலை 10-00 மணிக்கு



பத்மஸ்ரீ குணசித்திர நடிகர்

பானுமதி — எஸ். வி. ரங்கராவ்

ஏ. வி. எம். ராஜன் – பண்டரிபாய்

முத்துராமன் — பாரதி — நாகேஷ்

நடிக்கும்

வாசு பிலிம்ஸ் அளிக்கும்

**பூவும் பொட்டும்**

டைரக்ஷன்

தாதாமிராசி

இங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)

எம். ஜி. ஆர். — ஜெயலலிதா

நடித்த

**சந்திரோதயம்**


மேஷம்- கடமையில் தொல்லை, சோர்வுமிகுதி.

ரிஷபம்- பரோபகாரச் சிந்தை, உறவினர்வருகை.

மிதுனம்- வியாபார விருத்தி, தெய்வ வழிபாடு.

கடகம்- மக்களால் புகழ், மதிப்பும் உயரும்

சிம்மம்-, நம்பிக்கை மோசடி, பின்தங்கிய நிலை.

கன்னி- நலிவுக்கு இடமுண்டு, நாவடக்கம் நன்று.

துலாம்- வெள்ளிப் பணம் துள்ளும். வேண்டியது கிடைக்கும்.

விருச்சிகம்- இரும்பு மனம், இருண்ட வாழ்வு.

தனுசு- திடீர்வரவு, திகைக்க வைக்கும் சம்பவம்.

மகரம்- உள்ளமும் துள்ளும், உண்மையும் வெல்லும்.

கும்பம்- பகைமூட்டம், பதட்டத்தைத் தவிர்.

மீனம்- இல்லம் இன்றது கட்டி வெல்லம்.

சோதிடக் கலாநிதி

திருமலை வேலுப்பிள்ளை


**ராஜா** 106வது தினம் (யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-45

எம். ஜி. ஆர்-ஜெயலலிதா

நடித்த

**ஒளிவிளக்கு**

(ஈஸ்ட்மென் கலர்)

மாதர்களுக்கு அரைக்கட்டணம்

இணுவில்

**ஸ்ரீ காலிங்கன்**

தினசரி: 6-30, 9-30 மணி

பிரிபோயா, போயா 2-30மணி

ஜெய்சங்கர் - சோ

நடித்த

**நீலகிரி**

**எக்ஸ்பிரஸ்**

**MANOHARA**

JAFFNA

Daily 6-30 & 10-00 P.M.

D. R. Nanayakkara.

Jeewarani, Santhia Kumari

in

**BICYCLE HORA**

(Sinhalese)

**REGAL** at JAFFNA

Daily 4-45, 7 & 9-45 p.m.

Poya, Pre-Poya 10-30 A.M.

Kirk Douglas

Richard Harris

in

THE HEROES OF TELEMARK


அடுத்த மாதம் இணுவில் மத்தியசந்தை மைதானத்தில் இடம்பெறும்.

## திருவடி நிலையில் நீச்சல்தடாகம்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் - திருவடிநிலையில் நீச்சல்தடாகம் ஒன்று நவீனமுறையில் அமைக்கப்படவிருக்கின்றது. இதற்கான வேலைகள் விளையாட்டு அமைச்சின் உதவியுடன் கவனிக்கப்பட்டுவருகின்றன. நீச்சல் தடாகம் அமைய வேண்டிய இடத்தை விளையாட்டு அதிபர் திரு. எஸ். எஸ். குணவர்த்தன பார்வையிட்டுச்சென்றார்.

## ஆசிரியர், மாணவர் கஷ்டம்

புலோலி, திங்கள்

புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலை கட்டட வசதியில்லாத காரணத்தால் இங்குள்ள ஆசிரியரும் மாணவரும் நெருங்கிய நிலையில் தமது கடமைகளைச் செய்யவேண்டியுள்ளதாம்.

இதுசம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தும் இதுவரை எதுவித பலனும் கிட்டவில்லையாம்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ்வாய் 29—4—69

செய்திகள் காலை 7-00, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-10 உள்ளூர்ச் செய்திகள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 தொழிலாளர் கேட்டவை, 1-00 தேர்ந்தஇசை.

344 மீ. அன் 61 மீ.

மாலை 4-30 மெல்லிசை, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 நாளையசந்ததி, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 வயலின், 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்நாடக இசை, 7-35 முத்திநெறி, 8-00 செய்திச்சுருக்கம் 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்தியஇசை, 9-30 பேச்சு, 9-40 கர்நாடகஇசை, 10-30 செய்திச்சுருக்கம்.

கே. தம்பு, கோண்டாவில; ஏ. வன்னியசிங்கம் - கந்தரோடை.

தம்பி செல்லையா (பலாலி), இளையதம்பி சின்னத்துரை (பலாலி).

நிர்வாகசபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது. திரு. எம். ஜெயராமன் (நிர்வாக காரியதரிசி: ஐ.

பாரிகளின் ஒத்துழைப்போடு இந்திய சேலைகளை இங்கு கொண்டுவந்து வியாபாரம் செய்வதாகக்கூறினார்.




## நிகரற்ற கவர்ச்சிப் பெண்ணுக நிச்சய வழி—

## கோயா பெர்பியூமும் கோலோனும்




உங்கள் பெண்மையின் மென்மை வனப்பை மேலும் வனப்பாக்க, நம்பத்தகுந்த நறுமண வாசனைத் திரவியங்கள் கோயா பெர்பியூமும் கோலோனும்.

உலகின் உன்னத வாசனைத் தயாரிப்பாளர்கள் தனித்தனிச் சிறப்புடன் சீர் செய்தளிக்கும் எழு மனங்கவர் நறுமணங்கள் கொண்ட கோயா பெர்பியூமும் கோலோனும், நாகரிக மாநகர் தோறும் வசீகர வனிதையரால்விரும்பித் தேர்ந்தெடுத்துப்பாவிக்கப்படுவன.

நாள் முழுதும் நீடித்த நறுமணந் தரும் பரிமளமான கோயா பெர்பியூமும் கோலோனும், நாள்தோறும் பாவியுங்கள்.

பிளாக் ரோஸ், கார்டினியா, என்டைஸ், நம்பர் 5,

லவ் அஃபயர், டைம்லஸ், வைல்ட் சில்க்.

லண்டன், பரிஸ், நியூயார்க், மாநகரங்களில் மகிமை பெற்றது கோயா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரஞ்சு அதிபர் டிகால் பதவி துறந்தார்

## சீர்திருத்தக் கொள்கைகளை மக்கள் மறுத்துவிட்டனர்

பாரிஸ், ஏப். 28

**பிரஞ்சு அதிபர் ஜெனரல் டிகால் முன்னர் அறிவித்தது போலவே தமது அதிபர் பதவியைத் துறந்துவிட்டார்.**

**பிரஞ்சு அரசியல் சீர்திருத்தங்கள் சம்பந்தமாக அதிபர் டிகால் நாட்டு மக்களின் முன் ஒரு திட்டத்தை சமர்ப்பித்து, அதன்மீது அவர்களின் கருத்தை அறிவதற்காக பொதுஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தினுர். இந்த வாக்கெடுப்பில் பிரஞ்சு மக்கள் அதிபர் டிக்காலின் திட்டத்தை நிராகரித்து விட்டார்கள். திட்டம் தோல்வியடைந்தால் பதவியிலிருந்து விலகி விடுவேன் என்று அவர் முன்பு அறிவித்திருந்தார் இப்பொழுது தமது வாக்கைக் காப்பாற்றியிருக்கிறுர்.**

அதிபர் டிகாலின் ராஜிஞமா இன்று பிற்பகல் அமுலுக்கு வருகின்றது. அதன் பிறகு இன்னும் மூன்று அல்லது ஐந்துவாரங்களுக்குள் அதாவது குறைந்தது 40 நாட்களுக்குள் புதிய அதிபர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். அதுவரைக்கும் பிரஞ்சு 'செனட்' (மூத்தவர்கள்) சபையின் தலைவர் இடைக்கால அதிபராகக் கடமையாற்றுவார்.

பிரஞ்சு நாட்டிலுள்ள 'செனட்' சபையின் அமைப்பிலும் பிராந்திய ஆட்சி முறையிலும் சீர்திருத்தங்கள் செய்வதற்கான ஒரு திட்டத்தை உருவாக்கி அதன் மீது பிரஞ்சு மக்களின் அபிப்பிர யத்தை அறிவதற்காக கடந்த ஞாயிற்றுக் கிழமை பொதுஜன வாக்கெடுப்பொன்றுக்கு அதிபர் டிகால் ஒழுங்கு செய்திருந்தார். இந்த வாக்கெடுப்பில் மக்கள் தமது திட்டத்தை நிராகரித்தால் உடனடியாகத் தமது பதவியை ராஜிஞமா செய்து விடப் போவதாகவும் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டால் 1972ம் ஆண்டில் நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலில் மீண்டும் பாட்டியிடப் போவதில்லையென்றும் அதிபர் டிகால் அறிவித்திருந்தார். வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு முன்பே பொதுமக்களில் பெரும்பான்மையானவர்கள் திட்டத்தை எதிர்க்கிறுர்கள் என்ற கருத்துப் பொதுவாக நிலவிவந்திருந்தது. அதன் காரணமாகவே

### பிரதமர் அறிக்கை

வாக்கெடுப்பில் பொதுமக்களில 6 சதவிகிதத்தினர் டிகாலின் சீர்திருத்தத் திட்டங்களை நிராகரித்துவிட்டனர். 4 சதவீதத்தினரே ஆதரித்துள்ளனர். வாக்கெடுப்புகளின் முடிவுகள் வெளிவந்துகொண்டிருந்த வேளையில் திட்டம் தோல்வியுற்றுவிட்டதை பிரஞ்சு பிரதம மந்திரி டெலிவிஷனில் தோன்றி ஒப்புக் கொண்டார். திட்டம் தோல்வியுற்றதற்காக அவர் வருத்தம் தெரிவித்தார். நாடு கஷ்டமான பிரச்னைகளை எதிர்நோக்கவிருக்கின்றது என்று அவர் குறிப்பிட்டார், பிரதமரின் அறிக்கைவெளியானவுடன் அதிபர் டிகால்தமது ராஜிஞமாவை அறிவித்தார்

## "டிகால் குட்பை"

அதிபர் டிகால் ராஜிஞமா பற்றிய செய்தி வெளியானவுடன் பாரிசிலும் அதிபர் மாளிகையின் முன்னுலும் ஆயிரக்கணக்கானவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். டிகாலின் தோல்வியை அவர்கள் ஆரவாரம் செய்து வரவேற்ருர்கள். ''டிகால் குட்பை'' (போய் வாருங்கள் டிகால்) என்று அவர்கள் சப்தமிட்டார்கள் ''போயிட்டுவாங்கோ, இது ஆரம்பம்தான்'' என்று அவர்கள் கோஷமிட்டார்கள். சிறுகைகலப்புகளும் இடம் பெற்றன.

### எதிர்க்கட்சி வரவேற்பு

டிகாலுக்கு ஏற்பட்ட தோல்வியை பிரஞ்சு எதிர்க்கட்சிகள் வெகுவாக வரவேற்றுள்ளன. மக்களை அமைதியாக இருக்கும்படி அவர் கேட்டுக் கொண்டிருக்கிறுர்கள். எதிர்க்கட்சியினரை புதிய பொறுப்புகள் எதிர்

### பிரிட்டன் நிலை

அதிபர் டிகாலின் வீழ்ச்சி பிரிட்டனுக்கு மிகவும்சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்துமென்று சிலர் கருதுகிறுர்கள். ஆனல் டிகாலின் பின்னர் அந்த இடத்துக்குவரும் புதிய அதிபரின் போக்கைப் பொறுத்துத்தான் இது அமையுமென்றும் வேறு சிலர் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன்சேருவதற்கு பிரான்சே பெரிதும் முட்டுக்கட்டையாக இருந்து வந்துள்ளது.

இதற்கு அதிபர் டிகாலின் கொள்கைதான் காரணமாகும். இப்பொழுது டிகால் பதவி துறந்து விட்டதால் அந்தக் கொள்கையில் மாற்றம் ஏற்படலாமென்று பிரிட்டனில் எதிர்பார்க்கப்படுகின்றது.

### அதிபர் டிகால்

அதிபர் டிகால் சுமார் 11 ஆண்டுகளுக்குமுன் அதிபர் பதவிக்கு வந்தார். 1958

# அரபுக்குடியரசுக்கு இஸ்ரேல் இறுதி எச்சரிக்கை

டெல் அவிவ், ஏப். 28

சூயஸ்கால்வாய்க்குக் குறுக்கே நடைபெற்றுவரும் சூட்டுச்சம்பவங்கள் நிறுத்தப்படாவிட்டால் கடுமையான ராணுவ நடவடிக்கைகளில் இறங்கப்போவதாக இஸ்ரேல் ஐக்கிய அரபுக் குடியரசுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கின்றது.

மேற்கு நாடுகளின் தூதர் ஒருவர் மூலம் இந்த இறுதி எச்சரிக்கையை இஸ்ரேல் பிரதம மந்திரி திருமதி கோல்டா மெயர் கெய்ரோவுக்கு அனுப்பிவைத்துள்ளாராம்.

### பலத்த மோதல்

நேற்று சமீப காலத்தில் நடைபெற்றிராத அளவுமிக பலமான மோதல் ஒன்று இஸ்ரேலுக்கும் அரபுக்குடியரசுப் படைகளுக்குமிடையில் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது இந்த மோதலில் பலத்த சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் கருதப்படுகின்றது.

ஜோர்டான் பள்ளத்தாக்கிலும் நேற்று ஜோர்டான்- இஸ்ரேல்துருப்புகளுக்கிடையில் மோதல்நடைபெற்றது. 20 இஸ்ரேலியர் கொல்லப்பட்டனர், அல்லது காயமுற்றனர் என்று ஜோர்டான் அறிவித்துள்ளது ஜோர்டான் தரப்பில் ஆள் சேதமில்லையாம்.

# பொலீவிய அதிபர் விபத்தில் மரணம்

நியுயோர்க், ஏப். 28

தென்அமெரிக்க நாடான பொலீவியாவின் அதிபர் ஜெனரல் ரெனி பாரியன் டோஸ் ஓர்ட்டுனே ஹெலிகெப்டர் விபத்தொன்றில் மரணமானுர்.

நாட்டைச் சுற்றிப் பார்ப்பதற்காக ஹெலிகொப்டரில் போய்க் கொண்டிருக்கையில் ஹெலிகொப்டர் மின்சாரக் கம்பமொன்றின்மீது மோதி விபத்துக்குள்ளாகியது. 49 வயதான அதிபர் மரணயானுர். விமானத்திலிருந்த மற்றவர்கள் பலத்த காயங்களுக்குள்ளானுர்கள்.

திரு. பாரியண்டோஸ் 1964-ம் ஆண்டு ராணுவ புரட்சி மூலம் பதவிக்கு வந்தார். 1966-ம் ஆண்டில் சட்டபூர்வமாக அதிபர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். பொலீவியாவில் கம்யூனிஸ்டுகளின் கிளர்ச்சியை ஒடுக்க கடும் நடவடிக்கைகள் எடுத்து அந்தக்கட்சியையும் அவர் சட்ட விரோதமாகப் பிரகடனம் செய்தார்.

# இந்தியசேலைகளை விரும்பும் இலங்கைப் பெண்கள்

## டாக்டர் தகநாயக்கா கவலை

ஹபரதுவ, திங்கள்

'பாரதப் பிரதமர் இந்திரா காந்திகூட நம்நாட்டு கைத்[illegible] ஆசை[illegible] காரணம் இச்சேலைகள் [illegible] ளேன். இப்பிரச்னை தீர்க்கப்படாததையிட்டு நான்வருத்தமடைகிறேன். நெசவுத் [illegible] வளர்ப்பதற்கு [illegible]முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. எனவே இத் தொழில் [illegible] சம்பந்தமாக

## கோவில் குழப்பத்தில் 6 பேர் பலி

ஹைதராபாத், ஏப் 28

ஆந்திர பிரதேசத்தில் கடப்பை ஜில்லாவில் போவேரம்மா என்ற தேவி கோவிலில் இடம் பெறவிருந்த மிருகங்களைப் பலியிடும் நிகழ்ச்சியொன்றின் போது ஏற்பட்ட கலவரத்தில் பொலிசார் சுட்டதில் 6 பேர் பலியானுர்கள்.

## 'தீவுப்பகுதி பஸ் சேவையை திருத்துக'

அல்லைப்பிட்டி, திங்கள்

தீவுப்பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபையினரால் நடத்தப்பட்டுவரும் பஸ்வண்டிச் சேவை மிகவும் சீர்கேடடைந்த நிலையில் உள்ளது. இதனைத் திருத்தி குறிப்பிட்ட நேரத்திற்கு ஒழுங்காக பஸ் சேவையை நடத்துக' என்று வேலணை சனசமூக நிலயத்தினர் இலங்கைப் போக்குவரத்துச் சபை வடமாகாண முகாமையாளரிடம் அவசரக் கடித மூலம் கேட்டுள்ளனர். பழுதடைந்த பஸ் வண்டிகளும் வடுப்பதற்கு ஆசனமற்ற பஸ் வண்டிகளும் இப் பகுதிக்கு சேவைக்கு விடப்படு இதனுல் இப்பகுதி மக்கள் மிகவும் கஷ்டமடைகின்ருர்கள் என்றும் யாழ்ப்பாணத்திலிருந்து வேலணை மட்டும் ஓர் கடுகதி பஸ் வண்டிச் சேவையை ஆரம்பிக்க வேண்டுமென்றும் அக்கடிதத்தில கேட்கப்பட்டுள்ளது.

## முல்லைத்தீவுப் பகுதியில் பயங்கரக்காய்ச்சல்

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத்தீவில் தற்போது பரவிவரும் பயங்கரக் காய்ச்சல் பெரியோர் முதல் குழந்தைகள்வரை அநேகரைப் பீடித்துள்ளது. இந்நோய் காரணமாக முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் கங்காணி ஒருவர் மூன்று நாட்களில் தன் இரு பிள்ளைகளை இழந்துள்ளதும், இந்நோயினுல் பீடிக்கப்பட்ட இன்னும் பலர் இறந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் தினமும் இந்நோயால் பீடிக்கப்பட்டவர் தொகை அதிகரித்துவருகிறது.

வெசாக்

## நாடெங்கும் விசேட இ.போ.ச. சேவை

கொழும்பு, திங்கள்

வெசாக் திருநாளை முன்னிட்டு நாட்டின் சகலபாகங்களிலும் இலங்கைப்போக்குவரத்துச்சபை விசேடபஸ் சேவையை ஒழுங்கு செய்துள்ளது, சகல டிப்போக்களிலுமுள்ள ஓடக்கூடிய நிலையிலுள்ள சகல பஸ்களும் சேவைக்கு விடப்படுமெனத் தெரியவருகிறது.

வெசாக் திருநாளுக்குபஸ் சேவை அத்தியாவசியமான சேவையாகக் கணிக்கப்பட்டதனுல் சகல இ.போ.ச. ஊழியர்களின் லீவுகளும்இப்போது ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத் திருநாட்களில் நாட்டின் சகல பாகங்களில் இருந்தும் பல லட்சக் கணக்கான மக்கள் கொழும்பில் கூடுவார்கள் என எதிர்பார்க்கப் படுவதால் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். சகல பிரிவிலும் வெளி இடங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் குற்றத்தடுப்பு, இரகசியப்பொலிஸ், போக்குவரத்துப் பொலிஸ் ஆகிய பகுதியினர் கடமையில் ஈடுபடுவர். (வி. நி)

## காடையர் தொல்லை

உடுவில், திங்கள்

சுன்னுகம் பொலிஸ் பகுதியில் காடையர் தொல்லை அதிகரித்துள்ளதாம். சுன்னுகம் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த புன்னலைக்கட்டுவன் தெற்குப் பகுதியில் இவர்களின் தொல்லை அளவுக்கு அதிகமாகியுள்ளதாம். மாலை வேளையிலும், இரவு நேரங்களிலும் இவர்கள் குடித்துவிட்டு வழியிற் செல்வோரைத் தூஷித்தும் தகாத வார்த்தைகளால் ஏசியும் தொல்லை கொடுக்கிருர்களாம். கோவிலுக்கும், சனசமூகநிலயம், ஏனையபொது நிலயங்களுக்கும் செல்பவர்கள் இவர்களின் தொல்லைக்கு ஆளாகிருர்களாம். இவர்களின் இந்தச் சேஷ்டைகளிலிருந்து தம்மை விடுவிக்கசுன்னுகம் பொலிஸ் பகுதியினர் உதவவேண்டும் என பொதுமக்கள் வேண்டியுள்ளனர்.

......

## பிரயாணிகள் கஷ்டம்

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத்தீவிலிருந்து கொக்குத்தொடுவாய் கொக்கிளாய் ஆகிய இடங்களுக்குச் செல்லும் பிரயாணிகள் படும் கஷ்டம் கொஞ்சமல்ல நாயாற்றின் அக்கரையிலிருந்து கொக்கிளாய் வரை சேவையில் ஈடுபட்டிருககும் பஸ் வாரக்கணக்கில் கவனிப்பாரற்று பழுதடைந்து போவதால் பிரயாணிகள் முல்லைத்தீவு ஆஸ்பத்திரி நீதிமன்றம் மற்றும் முக்கிய அலுவலகங்களுக்குச் செல்ல முடியாதவர்களாகவும் ஆபத்தான வேளையில் பொலிசாருடன் தொடர்பு கொள்ள முடியாதவர்களாகவுமிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

...யென்றும் அதிபர் டிகால் அறிவித்திருந்தார். வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு முன்பே பொதுமக்களில் பெரும்பான்மையானவர்கள் திட்டத்தை எதிர்க்கிறார்கள் என்ற கருத்துப் பொதுவாக நிலவிவந்திருந்தது. அதன் காரணமாகவே அதிபர் டிகால் பிரஞ்சு மக்களைக் கவருவதற்காக ராஜினாமா பயமுறுத்தலை விடுத்ததாகவும் கூறப்பட்டது. ஆனால் பொதுமக்கள் கருத்து வெளியானவுடனேயே அதிபர் டிகால் தமது ராஜினாமாவை அறிவித்து விட்டார்.

டிகாலுக்கு ஏற்பட்ட தோல்வியை பிரஞ்சு எதிர்க்கட்சிகள் வெகுவாக வரவேற்றுள்ளன. மக்களை அமைதியாக இருக்கும்படி அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சியினரை புதிய பொறுப்புகள் எதிர்நோக்கியுள்ளனவென்று எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார்.

பார்லிமென்டரி அமைப்பில் பெரும்மாற்றம் வேண்டுமென்று மக்கள் அங்கலாய்க்கிறார்கள் என்பதை இந்த வாக்கெடுப்பு முறைகள் அறிவுறுத்துவதாக கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

...பதவி துறந்து விட்டதால் அந்தக் கொள்கையில் மாற்றம் ஏற்படலாமென்று பிரிட்டனில் எதிர்பார்க்கப்படுகின்றது.

### அதிபர் டிகால்

அதிபர் டிகால் சுமார் 11 ஆண்டுகளுக்கு முன் அதிபர் பதவிக்கு வந்தார். 1958 டிசம்பர் 21-ம் திகதி அவர் அதிபராக முதலில் தெரிவு செய்யப்பட்டார். பின் 1965 டிசம்பர் 19-ம் திகதி மீண்டும் அப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டார். 1890-ம் ஆண்டு நவம்பர் 22-ம் திகதி பிறந்த அதிபர் டிகாலுக்கு 78 வயதாகின்றது.

பிரான்சின் பிரதமமந்திரி பதவியிலிருந்து டிகால் 1946-ம் ஆண்டு விலகினார். 1958-ல் அதிபராகப் பதவியேற்ற பின்னர் அல்ஜியரில் ஏற்பட்ட கலகங்களை அடக்கி அந்தப் பிராந்தியத்துக்கு சுதந்திரம் வழங்கினார். உள்நாட்டிலும் குழப்பங்களை அடக்கி ஸ்திர நிலைமையை உருவாக்கினார். ஆனால் சமீப காலத்தில் பிரான்சில் வெடித்துக் கிளம்பிய மாணவர் கிளர்ச்சிகள்தான் பெரிய பிரச்னையாக உருவெடுத்தது. அதிபர் பதவி துறப்புக்கும் இந்தக் கிளர்ச்சிகள்தான் அடிப்படைக் காரணம் என் கூறப்படுகின்றன.

## டாக்டர் தகநாயக்கா கவலை

ஹபரதுவ, திங்கள்

'பாரதப் பிரதமர் இந்திரா காந்திகூட நம்நாட்டு கைத்தறி சேலைகளை அணிய ஆசைப்படுகிறார். இதற்குக் காரணம் இச்சேலைகள் மிக அழகாகவிருப்பதேயாகும். நமது நாட்டு சேலைகளின் தரம் இவ்வாறிருக்க இங்குள்ள பணக்காரப் பெண்கள் இந்திய சேலைகளை விரும்புவதற்கு என்ன காரணமோ தெரியவில்லை.'

ஹபரதுவாவில் கைத்தறி நிலையமொன்றைத் திறந்து வைத்து அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய உள்நாட்டமைச்சர் டாக்டர் தகநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் நெசவுத் தொழிலை விருத்தி செய்வதே அரசாங்கத்தின்கொள்கையாகும். ஆனால் சில வேளைகளில் நூல்தட்டுப்பாடு காரணமாக இத்தொழில் தடைப்படநேரிடுகிறது. இது சம்பந்தமாக நான் பலதடவை அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறியுள்ளேன். இப்பிரச்னை தீர்க்கப்படாததையிட்டு நான்வருத்தமடைகிறேன். நெசவுத் தொழிலை வளர்ப்பதற்கு பெருமுயற்சி எடுக்கப்பட்டுள்ளது. எனவே இத்தொழில் சம்பந்தமாக ஏற்படும் பிரச்னைகள் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். இத்தொழில் மூலம் சிறந்த ஜவுளிகள் உற்பத்தி செய்யப்படுவதோடு அதிகமானோருக்கு வேலைவாய்ப்பும் கிடைத்துள்ளது.

கொழும்பிலுள்ள சில வர்த்தகர்கள் இந்திய ஆடைகளை இறக்குமதி செய்கிறார்கள். இதுமட்டுமன்றி வசதியுள்ள பல பெண்கள் இந்தியாவுக்குச் சென்று இந்திய ஆடைகளை வாங்கிவருவதே வழக்கமாகவும் கொண்டுள்ளார்கள், ஆனால் உள்ளூரில் நெசவுசெய்யப்படும் துணிகள் தரத்தில் இந்தியத்துணிகளுக்குக் குறைந்தவைகளல்ல. அதனால்தான் பாரதப் பிரதமர் இந்திரா காந்தியும் இலங்கை சேலைகளை அணிய விரும்பினார் எனக் கூறினார்.

...ஓர் கடுகதி பஸ் வண்டிச் சேவையை ஆரம்பிக்க வேண்டுமென்றும் அக்கடிதத்தில கேட்கப்பட்டுள்ளது.

...ஏனை. சகல பிரிவிலும் வெளி இடங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் குற்றத்தடுப்பு, இரகசியப்பொலிஸ், போக்கு...

...கவுமிருக்கின்றனர்.

வரத்துப் பொலிஸ் ஆகிய பகுதியினர் கடமையில் ஈடுபடுவர். (வி. நி)

# ராதா அப்பீல்: தீர்ப்பு ஒத்திவைப்பு

புதுடில்லி, ஏப. 28

நடிகர் எம். ஆர். ராதா மீது விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையை எதிர்த்து டில்லி சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அப்பீல் விசாரணை முடிவடைந்துள்ளது. தீர்ப்பளிப்பது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரனை சுட்டுக் கொல்ல முயன்றதாக நடிகர் எம். ஆர். ராதா மீது சென்னை செஷன்ஸ் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் ராதாவுக்கு ஏழு வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது இந்தத் தண்டனையை சென்னை ஹைகோர்ட் ஊர்ஜிதம் செய்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து திரு. ராதா தரப்பில் டில்லி சுப்ரீம் கோட்டில் அப்பீல் தாக்கல் செய்யப்பட்டது. இந்த அப்பீல் மீதான விசாரணை இப்பொழுது முடிவடைந்து விட்டது. தீர்ப்பளிப்பதை கோர்ட்டார் பின் பாட்டிருக்கிறார்கள்.


✶ உறுதியானதும்
✶ நீடித்து உழைப்பதும்
✶ தன்னிகரற்றதுமான

"வைத்திலிங்கம்ஸ்"

இரும்பு—பித்தளை மர ஸ்குரூ ஆணிகளை

நீங்கள் வாங்குவதனுல்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.

தயாரிப்பாளர்கள்:
என். வைத்திலிங்கம்நிறுவனத்தார்
இரும்பு வியாபாரிகள்
450, பழைய சோனக தெரு, கொழும்பு-12,
தொலைபேசி: 7143 — 2029
இல- 138, கே. கே. எஸ். வீதி — யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530


கருணாநிதிக்கு

## காமராஜ் சுப்பிரமணியம் நன்றி

சென்னை, ஏப். 28

காங்கிரஸ் மாநாட்டு பந்தல் எரிந்ததற்கும் திரு. பக்தவத்சலம் காயமடைந்ததற்கும் கவலை தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் திரு. கருணாநிதி அனுப்பிய செய்திகளுக்கு நன்றி தெரிவித்து திரு. காமராஜரும் திரு. சி. எஸ். சுப்பிரமணியமும் பதில் தந்தி கொடுத்திருக்கின்றன. திரு. பக்தவத்சலத்தின் உடல் நிலை திருப்தியாக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

திரு. பக்தவத்சலத்துக்கு புதுச்சேரி முதலமைச்சர் திரு. பரூக் மரைக்காயரும் அனுதாபச் செய்தி அனுப்பியிருக்கிறார்.

## வெளியில்சென்று வழிபாடு

பருத்தித்துறை. திங்.

கடந்த புதன் கிழமை தொடக்கம் நடைபெற்று வரும் கரவெட்டி வெல்லன் விநாயகர் ஆலயத்தில் பூசகரைத் தவிர்ந்த ஏனையோர் கோவிலுக்கு வெளியில் நின்றே வணங்குகின்றனர்.

## வேலைக்குப் போகாத ஊழியர்க்கு அபராதம்

மீதோட்டமுல்ல, திங்.

கடந்த புது வருடப்பிறப்புத் திருநாட்களில் சுகயீனம் காரணமாக வேலைக்குப் போகாத ஊழியர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. கொழும்பு மீதோட்டமுல்லை இ. போ. ச. டிப்போவில் புது வருடப்பிறப்புத் திருநாட்களை முன்னிட்டு இ. போ. ச. ஊழியர்களின் சகல லீவுகளும் ரத்து செய்யப்பட்டிருந்த நேரத்தில் வேலைக்கு வராத ஊழியர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

லீவுகள் ரத்து செய்யப்பட்டிருந்த காலத்தில் பல நூற்றுக் கணக்கான ஊழியர்கள் சுகயீனம் காரணமாக வேலைக்குப் போகாத காரணத்தால் புதுவருடப் பிறப்புத்தினங்களில் கொழும்பு பஸ் சேவைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது சுகயீனம் காரணமாக வேலைக்கு வராத இ. போ. ச. ஊழியர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தை எதிர்த்து அப்பீல் செய்திருப்பதாகத் தெரிகிறது. அத்தியாவசிய பஸ் சேவைக் காலங்களில் தனிப்பட்ட வைத்தியர்களின் வைத்திய அத்தாட்சிப் பத்திரங்கள் செல்லுபடியாகாதென்று இ. போ. ச. உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வி. நி)

## அவதூறாக ஏசினராம்

மட்டுவில், சனி

டாக்டர் ஒருவரை அவதூறாக பேசிய கிராமசபை தலைவருக்கு ஒரு வருட நன்னடத்தைப் பிணையும் கோர்ட் செலவுக்கு ரூபா 100 செலுத்தும்படியும் தீர்ப்பளிக்கப்பட்டது.

செம்பியன்பற்று கிராம சபைத் தலைவர் எஸ். முத்தையா செம்பியன்பற்று வைத்தியநிலையப் பொறுப்பதிகாரி டாக்டர் ஆறுமுகம் செல்வரத்தினத்தை அவதூறாகப் பேசியதாக சாவகச்சேரி நீதிமன்றத்தில் கடந்த வருடம் மேமாதம் 17ம் திகதி இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வழக்கை விசாரணை செய்ய மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு தீர்ப்பளித்தார்.

......

## தொல்லை

சுழிபுரம், திங்கள்

மாதகல் மேற்குப் பகுதியில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை தாங்கமுடியாது விவசாயம் செய்யும் விவசாயிகள் பெருத்த நஷ்டத்துக்குள்ளாகிவருகின்றனர்.


கையிருப்பிலே!
டேவிட் பிரவுண்

770-36 BHP
ரூ. 18750/=
(வெளிநாட்டுச் செலவாணி உறுதிப்பத்திரத்துடன்)

880-46 BHP
ரூ. 20500/=
(வெளிநாட்டுச் செலவாணி உறுதிப்பத்திரத்துடன்)




அத்துடன் உறுதியுடன் உருவாக்கப்பட்ட



3முதல் 3½ தொன் நிறை கொள்ளும்
உயர்த்தக்கூடிய இழுவை வண்டி

தொடர்பு கொள்ளுங்கள்.
ரோலன்ஸ் (ட்ராக்டர்கள்) லிமிட்டெட்
ரோலன்ஸ் லிமிட்டெட் (துணைக் கம்பெனி) டர்ட் ரூட் கொழும்பு 7.

HOUSE OF R ROWLANDS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

'மனிதன் பூரணத்தை அடைய ஆசைப்படுகிருன். முயற்சியும் செய்கிருன். இதனின்றே இந்து சம்பிரதாயத்தில் பகவான் அடிக்கடி அவதாரம் எடுக்கிருன் என்கிற கொள்கை பிறந்திருக்கிறது.'

— மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமியவருஷம் சித்திரை மாதம் 17-ந் திகதி (29-4-69)


## திருக்கோணமலை

இப்போது இந்து சமூகத்தின மனதைப் பெரிதும் கலக்கியுள்ள விஷயங்களில் ஒன்று திருகோணமலையிலுள்ள புனித ஸ்ரீ கோணேசர் கோயிலைப்பற்றியதாகும், பல்லாயிரம் வருடங்களாக புராண காலத்திலிருந்து இக்கோவிலில் இந்துப் பெருமக்கள் பக்திசிரத்தையுடன் வழிபட்டுவந்திருக்கின்றனர்கள். போர்ச்சுகீயரின் ஆட்சிக்காலத்திலே இக்கோயில் இடிக்கப்பட்டதுடன் அதன் ஒரு பகுதி கடலில்மூழ்கடிக்கப்பெற்றுள்ளது. பலநூறு வருடங்களாக கோயிலே தரைமட்டமாகி மறைந்திருந்தபோதும் இந்துப் பொதுமக்கள் அந்த மண்ணுக்குத் தொடர்ந்து பூசைகள்செய்து பக்தியுடன் வழிபட்டுவந்தனரென்பது குறிப்பிடத்தக்கது. உயரத்திலுள்ள மலையிலிருந்து கடலோரத்திலே அர்ச்சனை, நிவேதனம் கற்பூரத்தீபம் எல்லாம் காட்டி அருவமூர்த்திக்கு பூசைகளைத் தொடர்ந்து செய்து வந்தார்கள். அவ்வளவு காலமும் இந்துக்கள் மட்டுமே அந்த இடத்தில் பூசை வழிபாடுகளைச் செய்துவந்தனரென்பதை முக்கியமாக கவனிக்க வேண்டும்.

பின்னர் அக்கோயிலை புதிதாகக் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பெற்றன. பூமிக்கடியிலிருந்தும் கடலிலிருந்தும் விக்கிரகங்களை எடுத்து இந்துப் பொதுமக்கள் கட்டிய அப்புதிய கோவிலில் பிரதிஷ்டை செய்திருக்கின்றனர்கள். இத்தெய்வீக விக்கிரகங்களை ஸ்தாபிக்குமுன்பாக, இலங்கையின் பல பகுதிகளுக்கும் ஊர்வலமாக எடுத்துச்சென்று பொதுமக்கள் வழிபட்டு தரிசித்தார்கள் என்பதை மறப்பதற்கில்லை. சைவசமய குரவரான திருஞான சம்பந்த

தில் அதற்குக் கோணமாமலை அல்லது சுவாமிமலை என்றே பெயர். இந்து சமூகத்தவர் வந்து வழிபடவும் சுவாமிக்கு ஊர்வலம், திருவிழா முதலியன நடத்தவும் பக்கத்திலே தீர்த்தம் கொடுக்கவும் கூடிய விதத்தில் கோயிலைச் சுற்றியுள்ள அந்த பகுதியை புனித இடமென்று ஒதுக்கி பாதுகாக்க வேண்டுமென்று இந்து சமூகத்தவர் உணர்ந்துள்ளனர். இலங்கையின் பல பகுதிகளிலுமுள்ள இந்துக்கள் தங்களது சமய ஸ்தாபனங்கள் மூலமும் பார்லிமெண்ட் சபையிலுள்ள இந்து எம். பி.க்கள் வாயிலாகவும், அப்பகுதியை இந்துக்களுக்குப் புனிதமானதென்று அறிவிக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டனர். அச்சமயம் ஸ்தலஸ்தாபன அமைச்சராக இருந்த திருச்செல்வமவர்கள் இதற்காக ஒரு கமிட்டியை நியமித்தார். ஆனால் பிரதமர் டட்லி சேனநாயகா இவ் விஷயம் தமது அதிகாரத்துக்கு உட்பட்டதென்றும் தம்மைக் கலந்திருக்க வேண்டுமென்றும் கருதி, அக் கமிட்டியைக் கலைத்து விட்டு, திருச்செல்வத்தின் சகோதரரும், பிரபல இந்துவும் நிரந்தரக் காரியதரிசியுமான திரு. எம். இராஜேந்திரத்தின் தலைமையில் வேறொரு கமிட்டியை நியமித்துள்ளார் அக்கமிட்டி இயங்கி, இந்துக்களும், பிறரும் இதன் முன் சாட்சியமளித்தனர். இந்து மாமன்றம், இந்து சமய சம்பந்தமான சபை, திருக்கோணமலை திருப்பணிச்சபை முதலிய ஸ்தாபனங்கள் உள்ளிட்டு பலர் சாட்சியமளித்துள்ளனர்

இதற்கிடையே அங்கு புதைபொருள் ஆராய்ச்சி நடத்த வேண்டுமென்று அவ்விசா

## அரசாங்க வசதிக்காக மேதினத்தைமாற்றக்கூடாது
### மாணவர் பேரவை கருத்தரங்கு

அளவெட்டி, திங்கள்

மாணவர்கள் தொழிலாளர்களுடன் இணைவதன் மூலம் தமது பிரச்சனைகளை இலகுவில் தீர்க்க கலாம். ஆதலினால் மாணவர் அனைவரும் மே 1-ம் திகதியே தொழிலாளருடன் சேர்ந்து மேதினத்தைக் கொண்டாட முன்வருக இவ்வாறு அகில இலங்கை தொழில்நுட்ப மாணவர் சங்கசம்மேளன செயலாளர் திரு. சபாபுஷ்பநாதன் மாணவர் பேரவை யின் யாழ் கிளை நடத்திய மேதின மேன்? என்ற கருத்தரங்கில் பேசுகையில் கூறினார்.

திரு. ஆர். கே. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் சபாபுஷ்பநாதன் தொடர்ந்து பேசுகையில்:

மேதினம் சர்வதேச தொழிலாளர் தினமாகும், அத்தினத்தை எக்கட்சியினரும் ஏகபோக உரிமை கொண்டாடமுடியாது ஆனால் தொழிலாளர்களை பயமுறுத்தி அவர்களது நியாயமான உரிமைகளைக் கூடஅளிக்க மறுக்கும் அரசாங்கங்களும், கட்சிகளும் கூட மேதினத்தைக் கொண்டாட முன்நிற்பது கவலைக்குரியதும், கண்டனத்துக்குரியதுமாகும்.

சர்வதேசம் முழுவதும் உள்ள தொழிலாளர்களின் ஒரே பொது விடுமுறை தினமானமே தினத்தை யாராயினும், எச்காரணம் கொண்டும் மாற்ற நினைப்பது தொழிலாளர்களுக்கு அவமரியாதையான செயல் என்று கூறினார்.

செல்வி நிர்மலா புண்ணியமூர்த்தி பேசுகையில் மேதினம் தொழிலாளர்களின் வசதிக்கேற்ப மாற்றியமைக்கப்படுவதே தவிர அரசாங்க வசதிக்கேற்பமாற்றி யமைக்கக் கூடாது உலகில் போராட்டங்களுக்கு மாதர்களுக்குள்ள பங்கை நாமும் உணர்ந்து தொழிலாளர்களோடுகட்சி வேறுபாடின்றி ஐக்கியப்பட்டு எமது உரிமைகளைப் பெறவேண்டும் என்று கூறினார்.

இக்கருத்தரங்கில் வி. பாலச்சந்திரன், சந்திரமோகன், செல்வி என். திலகம் உட்படமற்றும் பலர் பேசினர்.

தேசிய இனங்கள்

## சோஷலிச நாடுகளில் தான் உரிமைபெற்றுவாழ்கின்றன

அளவெட்டி, திங்கள்

மனிதனை மனிதன்சுரண்டி வாழ முடியாத சமூகஅமைப்பான சோஷலிஸ அமைப்புள்ள நாடுகளில் தான் தேசிய இனங்கள் உரிமை பெற்று வாழ்கின்றன. சமூகத்தைச் சமூகம் இனத்தை இனம் தாழ்த்தவும் ஒடுக்கவும் முடியாத அமைப்பு சோஷலிஸத்தின் கீழ்த்தான் உருவாக முடியும்.

இவ்வாறு கம்யூனிஸ்ட் வடபிரதேச செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் இணுவில் வாலிபர் சங்கக் கூட்டத்தில் பேசுகையிலே கூறினார்.

திரு. கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. வி. பொன்னம்பலம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் இன விடுதலைக்கு 'முதலாளித்துவ அமைப்பின்கீழ் விமோசனம் உண்டு என்று நம்பி, அதன் அடிப்படையில் அரசியல் கூட்டுக்கள் அமைத்து செயல்பட்டதமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சிபோன்ற கட்சிகள் கடந்த 20 ஆண்டுகளாகக் காட்டியவழி தொடர்ந்தும் தோல்வி கண்டு வருவது அதிசயம் அல்ல. அந்த வழியில் யு என். பி. தமிழரசுக் கட்சியினரின் இரகசியக் கூட்டும் உடைந்துள்ளது.

புதுவழியில் மாற்றம் ஏற்படுத்தும் வகையில் சோஷலிஸ சக்திகளுடன் அணிதிரண்டு தமிழ் இனமும் தனது விடுதலை காண முன்வரவேண்டும்.

## ஆட்சிமன்றத்தில் தமிழ் பகுதி பஸ்சேவை சீர்கேடு

'தூரகிழக்கு நாடுகளில்

## 1500 ஆண்டுகளுக்குமுன் இந்துமதம் வியாபித்திருந்தது"

பருத்தித்துறை, திங்கள்

"1500 ஆண்டுகளுக்கு முன் இந்து மதமும், கலாசாரமும் எவ்வாறு தூரகிழக்கு நாடுகளில் பரந்து, வியாபித்து வேரூன்றியிருந்ததென்பதற்கு பிஜி தீவிலிருந்து கொண்டுவரப்பட்ட இவ்விநாயக விக்கிரகம் ஓர் எடுத்துக் காட்டாகும்" என்று திரு. கே. எஸ். குக் பிஜித்தீவிலிருந்து கொண்டுவரப்பட்ட விநாயகர் விக்கிரகத்தின் பல்வேறு அம்சங்களையும் விளக்கி, வதிரி திரு. இருதயக்கல்லூரி மண்டபத்தில் உரிய முறையில் பூசையுடனும், ஆராதனையுடனும், அர்ச்சனைகளுடனும் ஆரம்பித்த இக்கூட்டத்தில் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

"விக்கிரகத்தின் ஒவ்வொரு அங்கமும் ஒவ்வொரு தத்துவத்தை உள்ளடக்கியுள்ளது. இரு காதுகளிலும் காணப்படும் குண்டலங்கள் பிரமனையும், இலக்குமியையும் பிரதிபலிக்கின்றன. பின்புறம் காளியையும் பிரதிபலிக்கின்றன."

கபாலி விநாயகரின் விக்கிரகம் பின்னர் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, வடமத்தியகல்லூரி, கட்டைவேலி ஞானசாரியர்கல்லூரி தேவரையாளி இந்துக்கல்லூரி ஆகியனவற்றுக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

## சத்திரசிகிச்சை நிபுணர் கொலை; மேலும் புதிய தகவல்கள்

கோட்டை, திங்கள்

படுகொலை செய்யப்பட்ட இளம் சத்திரசிகிச்சை நிபுணர் திரு, பந்துவ பெரேராவின் கொலைசம்பந்தமாக மேலும் புதிய தகவல்கள் கிடைத்துள்ளன.

விக்டோரியா பார்க்குக்கு முன்னால் காரில்வைத்து இவர் குத்திக் கொலைசெய்யப்பட்டபோது நேரில்பார்த்த ஒருவர் சாட்சிசொல்ல முன்வந்திருப்பதாக பொலிஸ் உயர் வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இக்கொலை சம்பந்தமாக துப்புத் துலக்குவதில் கொழும்பு பொலிஸ் சுப்பிரீண்டன் திரு. ராஜசிங்கம் தலைமையிலான 15 பேரைக்கொண்ட பொலிஸ் கோஷ்டியொன்று ஈடுபட்டுள்ளது.

## அமெரிக்க புற்றுநோய் ஆராய்ச்சிகுழுவில் இலங்கையர்

கோட்டை, திங்கள்

அமெரிக்காவில் புற்றுநோய் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் நான்கு ஆராய்சிக் குழுவில் இலங்கையைச் சேர்ந்த டாக்டர் முத்தையா டானியல் என்பவரும் ஒருவராவர் டாக்டர் மொலான் டெஸ் தலைமையிலான இக்குழு தீவிர ஆராய்சியின் பின்னர் புற்றுநோயைப் பரப்பம் அனுவைக் கண்டுபிடித்துள்ளது

இக் குழுவின் இலங்கைப் பிரதிநிதியாகிய டாக்டர் முத்தையா டானியல் பொஸ்ரனிலுள்ள பல்கலைக் கழகமொன்றில் பேராசிரியாகக் கடமையாற்றுகிறார் 40 வயதான டாக்டர் டானியல் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் தனது பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு சிறிது காலம் கொழும்பு மாநகரசபையில் கடமையாற்றி விட்டு ஆராய்சிப் படிப்புக்காக அமெரிக்கா சென்றார். விஸ்கொன்ஸின் பல்கலைக் கழகத்தில் தனது ஆராய்சிப் படிப்பை முடித்துக் கொண்டு, இப்பொழுது தொடர்ந்தும் பொஸ்ரன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும்ஆராய்சியாளராகவும் கடமையாற்றுகிறார்.

## காடையர் தொல்லைய ஒழிக்க விசேஷ பொலிஸ் பிரிவு

கோட்டை, திங்கள்

நாட்டின் பல பகுதிகளிலும் இப்பொழுது நிலவிவரும் காடையர் தொல்லையை ஒழிப்பதற்கு விசேஷ பொலிஸ் குழுக்களை நிய

## கருணாநிதி அனுதாபம்

சென்னை ஏப். 28

## ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சிலையை நல்லூரில் நிறுவுவது சம்பந்தமாக எடுக்கப்படவேண்டியிருக்கும் விடயங்கள் பற்றி மேலும் கலந்தாலோசிப்பதற்கான கூட்டமொன்று எதிர்வரும் 2ந் திகதி யாழ்ப்பாண மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது

ஆறுமுகநாவலர் சபைச் செயலாளரான திரு. எம். ஸ்ரீகாந்தா உட்படப் பலர் இக்கூட்டத்துக்குச் சமூகம் கொடுப்பர்.

இக்கூட்டத்துக்கான ஒழுங்குகளை உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை கவனித்துவருகின்றார். (கா. நி)

## நோய் பரவுகிறது

உடுவில், திங்கள்

நாட்டில் ஏற்பட்டிருக்கும் வெப்பம் காரணமாக வெப்ப நோய்கள் கடுமையாகப் பரவிவருகின்றன இருமலுடன் கூடிய 'புளூ' ஜுரம் வெகுவாகப் பரவிவருகிறது. அரசாங்க வைத்தியசாலைகளிலும், தனியார் வைத்திய நிலையங்களிலும் மக்கள் சிகிச்சைபெறுவதற்காகத் தினமும் குவிந்த வண்ணமிருக்கின்றனர்.

## சேவை நலம் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், செவ்.

ஏரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலையில் தொடர்ந்து 42 வருடங்களாக ஆசிரியராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றுள்ள திரு. மு. கந்தையாவுக்கு மேற்படி பாடசாலை மண்டபத்தில் ஒரு சேவை நலம் பாராட்டுவிழா கொண்டாடப்பட்டது.

பெற்றார், ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்ட இவ்விழாவில் ஆசிரியர் திரு பொன். வேலுப்பிள்ளை உட்படப் பலர் அவரது சேவை நலத்தைப் பாராட்டிப் பேசினர்.

பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தினரால் அன்னாருக்குப் பிரிவுபசாரப் பத்திரம் ஒன்றும், நன்கொடைப் பொருட்களும் வழங்கப்பட்டன.

0 0

அளவெட்டி, சனி

சமூக சேவையிலும், பொதுசன இயக்கங்களிலும் தொண்டாற்றியவரும் மானிப்பாய்கிறிஸ்தவ சேவா ஆசிரியர் சகாய நிதி சங்க நிர்வாகஸ்தருமான திரு. ஈ. இரத்தினசாமி

## நாடும் நடப்பும்

'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை' என்பார்கள். நமது தபால் தந்தி-இலாகாவின் கதையும் இப்படித்தானிருக்கிறது. முன்பெல்லாம் கொழும்புடன் தொலைபேசியில் தொடர்புகொள்வதானால் ஆகக்கூடியது ஐந்து மணி நேரமாகத்தானிருக்கும். இப்போதோ கொழும்புக்கு தொலைபேசித் தொடர்புகொள்வதற்கு தொலைபேசி இயக்குநர்களுடன் தொடர்புகொண்டதும் முதலில் கிடைக்கும் பதில் 'கொழும்பு லைன் அவுட் ஒவ் ஓடர்' என்பது. அப்படி இல்லையென்றால் 'எயிட் அவர்ஸ் டிலே' (எட்டு மணி நேரம் தாமதம்) என்று பதில் கிடைக்கும்.

எட்டு மணி நேரம் காத்திருந்த பின் 'மேலும் இரண்டு மணி நேரம் தாமதம்' என்றும் பதில் கிடைப்பதுண்டு. எட்டு மணிநேரத்தில் 'யாழ்தேவி'யில் ஒன்பது ரூபாய் தொண்ணூறு சதச் செலவுடன் கொழும்புக்குச் சென்று பல அலுவல்களையும் கவனித்துவிடலாம்.

தொலைபேசித் தொடர்பு இந்த இலட்சணம் என்றால் தந்திச் சேவை அதைவிட மோசம். அவசரத் தந்தி கொடுத்தால் அது ஆறஅமர சாவகாசமாக வந்துசேரும். அதற்குள் அவசர காரியமெல்லாம் முடிந்து பழைய விஷயமாகிவிடும். இவை தவிர ஆயிரக்கணக்கான தந்திகள் தபாலில் வந்து சேரும். 10 சத முத்திரைச் செலவுடன் தபாலில் எந்த விஷயத்தையும் விபரமாக எழுதி அனுப்பலாம். தபால் போய்ச் சேருவதற்குமுன் அவசரமாக தகவல் தெரிவிப்பதற்காக விஷயத்தை சுருக்கமாக ஆனால் தபால் கட்டணத்தைவிட எட்டு ஒன்பது பங்கு அதிகமாகப் பணத்தைச் செலவிட்டு அனுப்பும் தந்தி தபாலில வந்து சேருகிறது! தந்தியை தபாலில் அனுப்பும்போது அந்தத் தந்திக்குரிய கட்டணத்தைத் திருப்பிக்கொடுத்தாலாவது சற்று ஆறுதலாக இருக்கும்!

அமெரிக்கா கண்டத்திலிருந்து ஐரோப்பா ஆபிரிக்கா கண்டங்களுக்கு ஒரு சில நிமிஷங்களில் தகவல் அனுப்பப்பட்டுவருகின்ற யுகம் இது. இலங்கையில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குத் தகவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார்கள். இத்தெய்வீக விக்கிரகங்களை ஸ்தாபிக்குமுன்பாக, இலங்கையின் பல பகுதிகளுக்கும் ஊர்வலமாக எடுத்துச்சென்று பொதுமக்கள் வழிபட்டு தரிசித்தார்கள் என்பதை மறப்பதற்கில்லை. சைவசமய குரவரான திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் ''கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலையுடையாரே'' என்று திருகோணமலைப் பதிகத்தை சுமார் ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்குமுன்பாடியிருக்கின்றார். திருப்புகழ் பாடிய ஸ்ரீ அருணகிரிநாதரும் திருகோணமலை கோயிலைப் புகழ்ந்து பாடியுள்ளார்கள்.

இக்கோயிலை இந்துப் பொதுமக்கள் எவ்வளவு பயபக்தியுடன் கொண்டாடி வந்துள்ளனரென்றும் திருகோணமலை கோயில் எவ்வளவு கலை அழகுடன்கூடியிருந்ததென்பதுபற்றியும் அந்த நகரம் எவ்வளவு சிறந்த வர்த்தக கூடமாக இருந்ததென்றும் பலநூல்களில் வெளிநாட்டு சரித்திர ஆசிரியர்கள் விளக்கி இருக்கின்றார்கள். சமீபத்தில் அந்தக் கோயிலை இந்துசமூகத்தினர் மீண்டும் கட்டியபோது இலங்கை அரசாங்கமே இந்து சமய சம்பந்தமான சபை மூலம் கணிசமான தொகையை மான்யமாகக் கொடுத்ததென்பது மகிழ்ச்சியுடன் குறிப்பிடத்தக்கதாகும்.

அக்கோயில் உள்ள இடத்தை இக்காலத்தில் பிரடரிக் கோட்டை என்று சொல்லுகின்றனர். முன் காலத்

றம், இந்து சமய சம்பந்தமான சபை, திருக்கோணமலை திருப்பணிச்சபை முதலிய ஸ்தாபனங்கள் உள்ளிட்டு பலர் சாட்சியமளித்துள்ளனர்

இதற்கிடையே அங்கு புதைபொருள் ஆராய்ச்சி நடத்த வேண்டுமென்று அவ்விசாரணை சபையார் கருத்துத் தெரிவித்ததால், விசாரணை சற்றே நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாய் தெரிகிறது. பக்கத்திலுள்ள கடலிலும் இந்த ஆராய்ச்சியை நடத்தவேண்டுமென்று இந்துக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இக் கோவிலின் சில பகுதியும் கடலில் மூழ்கியுள்ளதற்குப் பல சரித்திரச் சான்றுகளுள்ளன.

பிரதமர் டட்லி சேனநாயகா, சமீபத்தில் வெளியிட்ட ஓர் அறிக்கையில் திருக்கோணமலை கோவில் பிரச்னையையும் குறிப்பிட்டுள்ளார். இக் கோவிலைச் சுற்றியுள்ள பகுதியை தங்கள் சமய விஷயத்திற்காக புனிதமானதென்று அறிவிக்க வேண்டுமென்ற இந்துக்களின் நியாயமான கோரிக்கையை அரசாங்கமும், பௌத்த பொதுமக்கள் உள்ளிட்டு இந்துக்களால்லாதாரும் ஒப்புக்கொள்வாரென்று மனப்பூர்வமாக நம்பப்படுகிறது. இந்துக்களும், மனக்கசப்புகளை ஏற்படுத்தாமலும் யாரையும் வீணுகப் புண்படுத்தாமலும், சௌஜன்யமான முறைகளை கையாண்டு, தங்கள் நியாயமிக்க் கோரிக்கையைப் பெறுவாரென்றும் நம்பப்படுகிறது.

## ஒரு நல்ல முடிவு

மே மாதம் 1-ந் திகதி மே விழாவைக் கொண்டாடுவதென்று தமிழரசுக் கட்சியினர் உத்தேசித்திருந்ததை, பௌத்த சமூகத்தின் உணர்ச்சிகளைக் கௌரவிப்பதற்காக, மாற்றிக் கொண்டது ஒரு வரவேற்கத்தக்க தீர்மானயாகும்.

நாம் ஏற்கனவே இப்பத்தியில் குறிப்பிட்டபடி தொழிலாளர் ஒற்றுமைக்கான இந்த விழாவை ஒரே நாளில் உலகெங்கும்கொண்டாடுவது சரியே. ஆனல் அதைவிட உள்நாட்டிலே பல சமூகத்தவரிடையே நல்லுறவும், அமைதியும் நிலவவேண்டியது அதிக முக்கியமாகுமென்று கருதியே, தமிழரசுக்கட்சித் தலைவர் இந்த முடிவைச் செய்திருக்கவேண்டும்.

இதன்பயனுக பௌத்த பொதுமக்களின் நல்லெண்ணம் தமிழ் மக்களுக்குக் கிடைப்பதாயின், அது பலவிதங்களில் நல்ல பயன்களைத் தருவதுடன், இந்நாட்டிலேபல பிரச்னைகளையும் சுமூகமாகத் தீர்க்கவும், சமூக நல்லுறவுகள் பலபபட்டு, நாடு அமைதியாக முன்னேறவும் வழிகோலுவதாக இருக்குமென்றே நம்புகிறோம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளி[illegible]

பொன்னம்பலம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

தனது விடுதலை காண முன் வரவேண்டும்.

## ஆட்சிமன்றத்தில் தமிழ் பகுதி பஸ்சேவை சீர்கேடு

### எம். பி. க்கள் சுட்டிக்காட்டினர்

கொழும்பு, திங்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இ. போ. ச. பஸ் சேவை மிகவும் சீர்கேடான நிலையில் இயங்குவதாக நேற்று முன்தினம் ஆட்சி மன்றத்தில் தமிழ் எம். பிக்கள் சுட்டிக்காட்டினர். சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், பருத்தித்துறை எம். பி. திரு. துரைரெத்தினம் ஆகியோர் இது பற்றி சபையில் பேசினர்.

பருத்தித்துறை- யாழ்ப்பாணம் பஸ்சேவை மிகவும் சீர்கேடான நிலையில் இருப்பதாக, பருத்தித்துறை எம். பி. திரு. துரைரெத்தினம் கூறினர். ஜூன் மாதம் 15-ம் திகதிக்கு முன் உதிரிப் பாகங்களை பருத்தித்துறை டிப்போவுக்கு வழங்க இ. போ. ச உயர் அதிகாரி ஒப்புக்கொண்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

காணுமல் போன

## இளம்பெண்ணை தந்தையுடன் செல்லுமாறு உத்தரவு

யாழ்ப்பாணம், செவ் காணுமல்போன இளம் பெண் பொலிஸாரால்கண்டு பிடிக்கப்பட்டார். அத்துடன் சந்தேகத்தில் வேறொருவரையும் ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைதுசெய்தனர்

காணுமல்போயிருந்த மண்கும்பானைச் சேர்ந்த முத்துச்சாமி நாகேஸ்வரியை தந்தையுடன் செல்லுமாறு உத்தரவிட்ட யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் ஜனுப் மொகமட் ஜமீல், சந்தேகநபரான செல்லையா இராஜதுரையை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து மீண்டும் அடுத்தமாதம் 5-ம் திகதி நீதி மன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

எதிரிக்காக புரக்டர்கள் ஆர். விசுவநாதனும், ரி. யோகநாதனும் ஆஜராஞர்கள். இப்பெண் கடத்தல் சம்பந்தமாக ஏற்கனவே நான்கு பேர் கைது செய்யப்பட்டு தலா 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

(கா நி.)

## பரந்தன் தொழிற்சாலையில் அடையாள வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், செவ். பரந்தன் ரசாயன தொழிற் சாலையில், இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த சுமார் 100 பேர் ஒன்றரை மணிநேரம் அடையாள வேலை நிறுத்தம் செய்தார்கள்.

வேலை மதிப்பீடு, வருடாந்த சம்பள உயர்வு தடை நிர்வாகம் முதலிய பிரச்சனைகளை தீர்க்கத் தவறியதனுல் இந்த அடையாளவேலை நிறுத்தம் நடைபெற்றதாக சங்க செயலாளர் தெரிவித்தார்வேலைநிறுத்தத்தின்பின் திரு கே. மயில்வாகனம் தலைமையில் நடந்த கூட்டத்தில் மேமாதம் 5ம் தேதிக்கு முன் இப் பிரச்னைகள் தீர்க்கப்படாவிடில், மே மாதம் 6 ம் தேதி முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதென தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானம் கூட்டுதாபன தலைவருக்கு அனுப்பி வைக்கப் பட்டது.

## ஞான ஒடுக்கம்

பத்துருத்துறை, திங். கரவெட்டியைச் சேர்ந்த கத்தோலிக்க வாலிபருக்கான ஞான ஒழுக்கம் -இம் மாதம் 30'லிருந்து அடுத்த மாதம் 2ம் திகதி வரை வதிரி அர்ச். அந்தோனியார் கோவிலில் வண. எஸ். குரே அடிகளாரின் போதனையுடன் ஆரம்பமாகி நடைபெற விருக்கிறது. இத்தினங்களில் விசேட பூசைகளும். ஆராதனைகளும் நடைபெறுமெனத் தெரிகிறது.

## ஒழிக்க விசேஷ பொலிஸ் பிரிவு

கோட்டை, திங்கள் நாட்டின் பல பகுதிகளிலும் இப்பொழுது நிலவிவரும் காடையர் தொல்லையை ஒழிப்பதற்கு விசேஷ பொலிஸ் குழுக்களை நியமிக்குமாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் மா அதிபர் திரு. அலரிக் அபய குணவர்த்தனு அறிவித்துள்ளார்.

இந்த விசேஷ குற்றத் தடுப்புகளைத் தனித்தனியாக மேற்பார்வையிடும்படி பொலிஸ் மா அதிபர் பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் தனியாகச் செல்லுவோருக்கு, குறிப்பாகப் பெண்களுக்குத் தொல்லைகொடுக்கும் காடையர்கள் அடிக்கடி காணப்படும் இடங்களில் சாதாரண உடையில் இந்த விசேஷ பொலிஸ் குற்றத் தடுப்புக் குழு அநேகமாக நடமாடுமெனத் தெரிகின்றது.

பகல் இரவு ஆகிய இரு வேளைகளிலும் பொதுமக்களைப் பாதுகாப்பது பொலிஸாரது கடமையென திரு. அபய குணவர்த்தனு பொலிஸ் அதிகாரிகளுக்கும், பொலிஸ்காரர்களுக்கும் அறிவித்துள்ளார். இந்த விசேஷ குற்றத்தடுப்புக் குழுக்களின் வேலைகளின் அறிக்கைகள் ஒழுங்காகத் தமக்கு அனுப்பப்படவேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார். காலிமுகக்கடற்கரை, விகாரமகாதேவி பூங்கா வேறும் பல பூங்காக்களில் மேலதிகமாகக் காவல் பொலிஸ்காரர்களைச் சாதாரண உடையில் அமர்த்துமாறும் பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

## புதிய கமிட்டி

அளவெட்டி, ஞாயிறு சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பழையமாணவர் சங்க பொதுக்கூட்டம் கல்லூரி அதிபர் திரு. வி. சுப்பிரமணியம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில்நடைபெற்றது. முதலில் சங்கச் செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் ஆண்டறிக்கை சமர்ப்பித்தார்.

அடுத்து நடந்த நிர்வாகிகள் தெரிவில் தலைவர் திரு. வி. சுப்பிரமணியம், உபதலைவர்கள் வி. தர்மலிங்கம் (உடுவில் எம். பி), எஸ். சுப்பிரமணியம், கே. சிவகுமாரன், எஸ். ராசா. செயலாளர் திரு. வி. பொன்னம்பலம், பொருளாளர் திரு கே. அகிலேஸ்வரன், 25 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவாகியது.

## கருணாநிதி அனுதாபம்

சென்னை ஏப். 28 நேற்று காலமான தமிழ் நாடு மேல்சபை எதிர்க் கட்சித் தலைவர் திரு. என். ஆர் தியாகராஜன் மறைவுக்கு தமிழ் நாடு முதலமைச்சர் அஞ்சலி செலுத்தியிருக்கிறார்.

நாட்டின் விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்டு சிறைக்குப் போன தியாகி திரு. தியாகராஜன் மேல் சபையின் எதிர்க்கட்சித் தலைவராகவிருந்து சபையின் விவாதங்களில் கலந்து கொண்டு பயனுள்ள கருத்துக்களைத் தெரிவித்து வந்ததை என்னுல் மறக்க முடியாது என்று திரு. கருணநிதி தெரிவித்துள்ளார்.

## கிராமச்சங்க தலைவர் கருத்து

உடுவில் திங்கள் ''உலகத் தொழிலாளவிவசாயப் பெருமக்கள் கொண்டாடும் தொழிலாளர் தினமான மே தினத்தை மாற்றி அமைக்க முற்படும் அரசாங்கம் எவ்வளவு தூரம் தொழிலாள விவசாய மக்கள் மீது நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டு மதிப்பளிக்கிறது என்பதை இன்று நாம் கண்கூடாகக் காண்கிறோம். உலக ஜனத்தொகையில் 65 லட்சம் மக்களை மட்டும் கொண்ட ஒரு சமுதாயம் கோடிக் கணக்கான மககளால் கொண்டாடப்படும் மே தினத்தை மாற்றி அமைகக முற்படுவதுசந்திரனை முகில் மறைக்க முற்படுவதற்கு ஒப்பாகும்.''

மேதினம் மே முதல் திகதியே கொண்டாடப்படவேண்டுமென வலியுறுத்தும் கூட்டம் ஒன்றில் பேசிய உடுவில் விவசாய தொழிலாளர்கழகத் தலைவரும், உடுவில் கிராமசபைத் தலைவருமாகிய திரு. எஸ். முத்துலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

## சடலத்தை மீட்டனர்

யாழ்ப்பாணம், திங்கள் நாவற்குழி பாலத்தின்கீழ் இருந்து பொலிஸார் நேற்று ஒரு சடலத்தை மீட்டனர். புகையிரத சிற்றுண்டிசாலை ஊழியரின் சடலமென கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

அளவெட்டி, சனி சமூக சேவையிலும், பொதுசன இயக்கங்களிலும் தொண்டாற்றியவரும் மானிப்பாய்கிறிஸ்தவ சேவா ஆசிரியர் சகாய நிதி சங்க நிர்வாகஸ்தருமான திரு. ஈ. இரத்தினசாமி சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டதைப் பாராட்டுமுகமாக மானிப்பாய் கிறிஸ்தவ சேவா ஆசிரியர் சகாய நிதிச் சங்கம் ஒரு பாராட்டு விழாவை நடத்தியது.

## ஜி. ஜி.

அளவெட்டி, திங்கள் காங்கேசன்துறை சீமந்துத் தொழிற்சாலை தொழிற் சங்க பிரதிநிதிகளை திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மே மாதம் 1-ம் திகதி பேச்சுவார்த்தை நடத்துவார்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை தொழிற்சாலை தொழிலாளரின் சகல படிகளுமுட்பட சம்பள மாற்றம் ஒவ்வொருவருட சேவைக்கும் ஒவ்வொரு மாதச்சம்பளம் ஓய்வு நன்கொடை, சம்பளத்திட்டம் ஆகிய பிரச்சனைகள் இப்பேச்சுவார்த்தையில் இடம் பெறும்.

யாழ். தொழிற் சங்க காரியாலயத்தில் நிகழும் இப்பேச்சுவார்த்தையில் முன்னுள் கிளிநொச்சி பட்டின சபைத்தலைவர் திரு. ஆனந்தசங்கரியும் கலந்து கொள்வார்.

இப்பேச்சு வார்த்தையின் பின் தொழிலாளர் கோரிக்கைபற்றி திரு. பொன்னம்பலம் கைத்தொழில் அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடாத்துவார்.

(8-ம் கலத் தொடர்ச்சி)

சேர்த்தனராம். பந்தலுக்குள்ளிருந்த அனைவரும் வெளியேறிவிட்ட பின்னர் தான் திருமதி இந்திரா அங்கிருந்து வெளியேறினுராம்.

வீரமங்கை மட்டுமல்ல தளபதியாகவும் இருக்கக் கூடியவர்தான்!

நான்கு லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட பந்தல் தீக்கிரையான 24 மணி நேரத்துக்குள் புதிய பந்தல் அமைக்கப்பட்டது பெரும் சாதனைதான்.

—'ஊர்சுற்றி'

றுந்து ஐரோப்பா ஆபிரிக்கா கண்டங்களுக்கு ஒரு சில நிமிஷங்களில் தகவல் அனுப்பப்பட்டு வருகின்ற யுகம் இது. இலங்கையில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குத் தகவல் அனுப்புவதற்குப் பெரும் பாடு.

இந்தியாவில் கூட சிறிய பத்திரிகைகளின் வளர்ச்சிக்காக அரசாங்கம் பல சலுகைகளையும் உதவிகளையும் அளித்துவருகிறது. இங்கு தலைநகரான கொழும்புக்கு வெளியே யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஒரேயொரு தினசரிப்பத்திரிகை 'ஈழநாடு' கொழும்பிலிருந்து செய்திகள் கிடைப்பதற்கு தொலைபேசியைத்தான் பெரிதும் நம்பியிருக்க வேண்டும். தொலைபேசியில் தொடர்புகொள்வதே பெரும் தொல்லையாக இருக்கிறது. இலங்கையில் தொலைபேசியை இனி 'தொல்லை பேசி' என்று மாற்றிவைத்துக்கொள்ளலாமா?

0 0 0

வட இந்தியாவில் பரீதாபாத் என்ற இடத்தில் அகில இந்தியக் காங்கிரஸ் மகாநாடு ஆரம்பமான சிறிது நேரத்தில் மகாநாட்டுப்பந்தல் திடீரெனத் தீப்பிடித்து எரிந்ததல்லவா? பந்தல் தீ பிடித்து மளமளவென்று தீபரவி நெருப்புச் சுவாலை வீசிக் கொண்டிருந்தபோது பிரதிநிதிகள் பலரும் தங்கள் செருப்புக்களையும் விட்டுவிட்டு உயிரைக்காப்பாற்றிக் கொள்வதற்காக வெளியே ஓடிக்கொண்டிருந்தபோது மேடையில் பிரதமர் திருமதி இந்திரா காந்தி காங்கிரஸ் அக்கிராசனர் திரு. நிஜலிங்கப்பா, உதவிப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் ஆகியோர் பதட்டமடையாமல் பிரதிநிதிகளை பக்க வாட்டு வாசல்களால்வெளியேறும்படி கூறிக் கொண்டு நின்றனராம். திரு நிஜலிங்கப்பாவையும் திரு. மொரார்ஜியையும் அவர்களின் உதவியாளர்கள் பெரும் சிரமத்துடன் வெளியே இழுத்துக்கொண்டுபோய்ச்

(7-ம் கலம் பார்க்க)


## விற்பனையாளர் தேவை

கண்டி மாவட்டத்தில் 'ஈழநாடு' தின, வாரப் பத்திரிகைகள் விற்பனை செய்வதற்கு முற்பணம் கட்டக்கூடிய பத்திரிகை விற்பனையாளர் தேவை. விபரங்கட்கு விநியோக மனேஜர், 'ஈழநாடு' த. பெ. எண். 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்புகொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org